# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 5 செவ்வாய்க்கிழமை (21-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:268


## அரசியல் தலைவர்களிடையே

# பொது இணைக்கத்தை ஏற்படுத்துவதற்கு மகாநாயக்கர்களின் தலையீடு அவசியம்

## அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள்

கொழும்பு,ஓகஸ்ட்,21

**நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் முயற்சியாக அரசியல் தலைவர்களிடையே பொது இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தும் வகையில் மகாநாயக்கர்கள் இது விடயத்தில் தலையிடவேண்டும்.**

**- இவ்வாறு கோரியிருக்கின்றார் மின்வளத்துறை அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ.**

மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் வண. ரம்புக்வெவ விபசி மகாதேரரிடம் இந்த வேண்டுகோளை அமைச்சர் நேற்று விடுத்தார்.

சகல கட்சிகளினதும் தலைவர்களிடமும் பேசி, அவர்களை இணங்க வைத்து, நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர்கள் ஒன்றுபடவேண்டியதன் அவசியத்தை உணர்த்தி, பொது இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்த மகாநாயக்கர் தொடர்ந்து முயற்சிக்கவேண்டும் என்று அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார்.

அரசியல் தலைவர்களிடம் ஒற்றுமை, பொது இணக்கம், குறித்துத் தொடர்ந்து தான் வலியுறுத்தி வருவதாகவும் -

ஆனால் அவை செவிடன் காதில் ஊதியவையாக இருப்பதாகவும் -

மகாநாயக்க தேரர் அமைச்சரிடம் தெரிவித்துவிட்டதாக மற்றொரு செய்தி தகவல் வெளியிட்டது. (உ-ஓ-4)



கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

# தடைவிதிக்கப்பட்டாலும் அதனை மீறி கொழும்பில் நாளை மறுதினம் பேரணி

## ஐ.தே.கட்சி தயாராவதாக அறிவிப்பு

கொழும்பு,ஓக.21

அரசுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நாளை மறுதினம் கொழும்பில் நடத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. திட்டமிட்டுள்ளது.

இந்தப் பேரணி தொடர்பாக ஐ.தே.க. ஏற்கனவே தனது ஆதரவாளர்களிடம் பிரசாரம் செய்து வருகின்றது.

இது தொடர்பாக இணையத்தள செய்தி நிறுவனம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த ஐ.தே.க. பேச்சாளர் டாக்டர் கருணாசேன கொடித்துவக்கு-

கடந்த ஜூலை மாதம் ஐ.தே.க. நடத்திய பேரணியில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் போன்று மீண்டும் இடம்பெறாது என்று நம்புவதாகவும்-

- ஆனாலும் அவ்வாறான சம்பவங்கள் நடந்தாலும் பேரணியை முன்னெடுத்துச் செல்வதில் ஐ.தே.க உறுதி பூண்டுள்ளதாகவும் - தெரிவித்தார்.

பொலீஸார் தடுக்க முயற்சித்தாலும், அதனையும் மீறி பேரணியை நடத்தி முடிப்பதில் தமது கட்சி உறுதியாக இருப்பதாக ஐ.தே.க. உபதலைவர் காமினி அத்துக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் திஸநாயக்கவை சாடுகின்றார் ஜனாதிபதி!

கொழும்பு,ஓக.21

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள்ளும், அரசுக்குள்ளும் தனக்கு எதிரான தீவிர நிலைப்பாட்டை எடுத்திருக்கும் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவை கடுமையாகச் சாடியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சமுர்த்தி முகாமையாளர்களுக்கான கூட்டத்திலேயே அமைச்சர் திஸநாயக்கவின் பெயரைக் குறிப்பிடாமல், அவரைக் கடுமையாக விமர்சித்தார் ஜனாதிபதி.

இந்தக் கூட்டம் குறித்து சமுர்த்தி விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கும், பிரதி அமைச்சர் டலஸ் அழகப்பெருமாவுக்கும் கடைசி நேரத்திலேயே அறிவிக்கப்பட்டதாகத் தெரி

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இருவர் உயிரிழப்பு

வவுனியா,ஓக.21

வன்னி மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊர்தி விபத்து ஒன்றில் கனியவள் அல்லது சங்கரி (பாக்கியநாதன் பேரின்பநாயகி - கிளிநெச்சி) என்ற போராளியும் -

அம்பாறை மாவட்டத்தில் 14ஆம் கொலனியில் படையினருடன் இடம்பெற்ற மோதலில் கப்டன் அதியன் (திருநாவுக்கரசு சிவக்குமார் - மட்டக்களப்பு) என்ற போராளியும் -

மரணமானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (உ-3)

# ஜனாதிபதியுடன் கருத்து வேறுபாடு உண்மை என்கிறார் திஸநாயக்க

## குற்றச்சாட்டுகளுக்கும் பதில்

கொழும்பு,ஓக.21

மக்கள் அபிலாஷைகளை நிறைவேற்றும் விடயத்தில் எமது அரசு செயற்பட்ட விதம் குறித்து எமக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கருத்து வேற்றுமை உள்ளது. அரசுக்குள்ளும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள்ளும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிராக ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்துகளுக்கு பதில் அளிக்கும் வகையில் அவர் நேற்று விடுத்த அறிக்கையிலேயே இப்படிக் கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எம் மத்தியில் உருவாகியுள்ள கருத்து மோதல்களுக்கு பேச்சு மூலம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோயிலில் சிப்பாய் காயம்

கொழும்பு,ஓக.21

நாகர்கோயில் பகுதியில் படையினரின் முன்னரங்கநிலை மீது நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். இவர் பலாலி இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-ஓ)

# ஜனாதிபதிக்கும் எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஓக.21

அரசின் மக்கள் விரோத மற்றும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பதவி விலகக் கோரியும் கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

பிற்பகல் 2மணிக்கு ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டத்தை சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்குமான மக்கள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசுக்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை ஏந்தியபடி கோஷங்களை எழுப்பினார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஏறாவூரில் இருவர் சூட்டுக்குப் பலி!

மட்டக்களப்பு,ஓக.21

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் ஐயன்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் படையினரின் சூட்டுக்கு இலக்காகி இருவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த இருவரில் ஒருவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான சாமித்தம்பி ஜெயக்குமார் (வயது28) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அயல் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பும் வழியில் இவர் சூட்டுக்கு இலக்கானதாக அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

மற்றைய நபரின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இந்தநபர் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் என்றும் -

அவரிடம் இருந்து சீனத் தயாரிப்பான கைத்துப்பாக்கி ஒன்றையும் இரு கைக்குண்டுகளையும் தாங்கள் கைப்பற்றியுள்ளதாகவும் -

ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர். (உ-3-4)

## கட்டுநாயக்காத் தாக்குதலின் எதிரொலி

# உல்லாச ஹோட்டல் ஊழியர்கள் 40ஆயிரம் பேரின் வேலை கல்தா!

கொழும்பு,ஓக.21

கட்டுநாயக்கா விமான நிலையம் மற்றும் விமானத் தளம் மீதான தாக்குதலின் எதிரொலியாக உல்லாசப் பயணிகளின் வருகை வீழ்ச்சி அடைந்துள்ளதை அடுத்து -

ஹோட்டல் துறையில் பணிபுரியும் 40ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிழக்கும் நிலையில் உள்ளனர் என்று அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தின் செயலாளர் எஸ். அமரசிங்க தெரிவித்தார்.

"ஹோட்டல் துறையில் ஒரு லட்சத்துப் 13ஆயிரம் ஊழியர்கள் பணிபுரிகின்றனர். அவர்களில் 45ஆயிரம் பேர் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகின்றனர். அவர்களில் 40 ஆயிரம் பேரே வேலையிழக்க உள்ளனர்" என்று அவர் மேலும் சொன்னார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஆயிரத்து 500 மெ.தொன் மா 'பொல்கொட' கப்பலில் வந்தது

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்துசேர்ந்துள்ள 'பொல்கொட' கப்பலில் ஆயிரத்து 500 மெற்றிக்தொன் மா எடுத்து வரப்பட்டுள்ளது.

இந்த மா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கூடாக பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் என்று யாழ்.செயலக உணவுக் கட்டுப்பாட்டு திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது எடுத்துவரப்பட்டுள்ள கோதுமை மா குடாநாட்டு மக்களுக்கு இருவார கால பயன்பாட்டுக்குப் போதுமானதாகும்.

எமக்குக் கிடைத்த தகவல்களின் படி இந்தத் தடவை எமக்கு வந்துசேர்ந்துள்ள கோதுமை மாவே இறுதி விநியோகமாகும்.

திருகோணமலையில் இயங்கி வரும் பிறிமா கோதுமை மா ஆலைக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இதுவரை காலமும் அமுலில் இருந்த உடன்படிக்கை காலாவதியாகியதை அடுத்து எதிர்வரும் காலங்களில் தனியார் ஊடாகவே கோதுமை மா விநியோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

புதிய ஒப்பந்தங்கள் ஏற்பட்டால் மட்டுமே உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் ஊடாக மா விநியோகிக்கச் சந்தர்ப்பம் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-6)

### சமாதான நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து

# நோர்வே புறக்கணிக்கப்படுவதால் அரசு மீது அறிவுஜீவிகள் அதிருப்தி

கொழும்பு,ஓக.21

நோர்வேயின் உதவியுடன் இனமோதலுக்கு அரசியல் தீர்வுகாணும் வழிமுறை அரசின் சமாதான நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து முற்றாக நீக்கப்பட்டிருப்பதையிட்டு தாம் ஆழ்ந்த கவலை கொள்வதாக சமாதான ஆதரவுக்கான குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து செயற்படும் அறிவுஜீவிகளைக் கொண்ட இந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விசனம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

புலிகளுடன் பேச்சு நடத்தி அமைதி காணும் முயற்சி முற்றாகக் கைவிடப்பட்ட நிலையில்தான் நாடாளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவு வழங்குவதாக சில கட்சிகள் எடுத்துள்ள முடிவை ஊடகங்களின் ஊடாக அறிந்து நாம் அதிர்ச்சி அடைந்துள்ளோம்.

நாட்டின் எதிர்கால நலனை ஒட்டி மீண்டும் அமைதிக்கான வழிமுறைகளை நாம் கையாளவேண்டும் என்பதையே கட்டுநாயக்கா வான்படைத் தளம் மீதும் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் மீதும் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதல் எம்மை எச்சரித்தபடி இருக்கின்றது; இலங்கையின் வளர்ச்சியையும் வளத்தையும் எண்ணிப்பார்க்கின்ற நாம் ஏற்பட்ட அழிவையும் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பேரழிவையும் நினைவிற்கொண்டு ஏதாவது ஒரு முனைப்புள்ள செயலில் ஈடுபடவேண்டும் என்பதை அறிவுறுத்தியபடி இருக்கின்றது. அதே வேளையில் போரில் ஈடுபடாதோருடைய உயிரிழப்பையும், உடைமை அழிவையும் ஏற்படுத்துகின்ற முறையில் இலங்கையில் வட - கிழக்கு மாகாணங்களில் புலிகளின் முகாம்களின் மீது நடத்தப்படுகின்ற தாக்குதல்கள் போரை மேலும் அதிகரிப்பதற்கு வழிவகுக்கும் என்று அஞ்சுகின்றோம். இதுவரையில் இலங்கையின் மீது அனைத்துலக சமுதாயம் வைத்திருந்த நம்பிக்கையை இழக்கச் செய்வதோடு பொருளாதார வீழ்ச்சியையும் அதிகரிக்கும் முறையிலேயே இச்செயல்கள் அமைவதாக நாம் கருதுகின்றோம்.

ஏற்கனவே நாம் கூறியதுபோல், அமைதி உருவாவதற்கு, ஆகக் குறைந்த சீர்திருத்தத் திட்ட அடிப்படையில் ஒத்துப்போகும் மனப்பான்மை உடைய அனைத்துக்கட்சி இடைக்கால அரசு ஒன்று உருவாக்குவது மிக இன்றியமையாதது என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். அதிகாரங்களை நிலைத்த தன்மையில் பகிர்ந்துகொள்கின்ற ஒத்த போக்குள்ள அனைத்துக் கட்சி ஆட்சி உருவாவதால்தான் எம்மை எதிர்நோக்கும் அமைதியையும் அரசியல் யாப்பில் சீர்திருத்தங்களையும் நாம் கொண்டுவரமுடியும்.

எதிர்காலத்தில் ஏற்றவகையில் பேச்சு நடத்துவதற்கு சர்வதேச சமுதாயத்தின் சார்பில் நோர்வே எடுத்துள்ள நல்லெண்ண விடயங்கள் செயல்வடிவம் பெற போர் நிறுத்தத்தை அரசும் புலிகளும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று நாம் கோரி நிற்கின்றோம். பாதுகாப்பை ஒட்டியும், மனிதாபிமானச் செயற்பாட்டை ஒட்டியும் புனர்வாழ்வு , புனரமைப்புகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதுடன் அரசியல் பேச்சுகளூடாக இடைக்கால நிறுவன ஒழுங்குகளையும் அரசமைப்புச் சீர்திருத்தங்களையும் கொண்டுவரவேண்டும் என்றும் நாம் வலியுறுத்துகின்றோம்.

இன்றுள்ளநெருக்கடிக்கு முதன்மை கொடுக்கின்ற வகையில், இம்முக்கிய விடயம் குறித்து அரசியல்வாதிகள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொது சமுதாயக் குழுக்களும், தனி நபர்களும் இணைந்து செயற்படவேண்டும் என்றும் நாம் கோருகிறோம்.

நாம் கூறும் வழிமுறைகள் மிகத் தேவையானவை. இவ்வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதால் எவருக்கும் எத்தகைய இழப்பும் இல்லை. அமைதி ஜனநாயக ஆட்சிமுறை ஆகியவற்றை வலியுறுத்துவதின் வாயிலாக இலங்கையின் எதிர்காலம் நம்பிக்கை உடையதாக அமையும். - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் சுனிலா அபயசேகர, சுனந்த தேசப்பிரிய, றொஹான் எதிரிசிங்க, கேதீஸ் லோகநாதன், ஜெஹான் பெரேரா, பாக்கியசோதி சரவணமுத்து, ஜீவன் தியாகராஜா, ஜோய் வில்லியம், ராதிகா குமாரசாமி ஆகிய அறிவுஜீவிகள் கையெழுத்திட்டுள்ளனர். (உ-ஓ)

# இரசாயன ஆயுதங்களை பயன்படுத்த வேண்டாம்!

## யாழ். மாநகரசபை கோருகிறது

யாழ்ப்பாணம்,ஓக.21

அரசு கொள்வனவு செய்துள்ளதாகக் கூறப்படும் இரசாயன ஆயுதங்களை யுத்தமுனையில் பாவிக்க வேண்டாம் என்று ஜனாதிபதியைக் கோரும் தீர்மானம் ஒன்று யாழ். மாநகர சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் மாநகர மேயர் என். ரவிராஜ் தலைமையில் நேற்றுக் காலை நடந்த சமயம் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்தத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"யுத்தத்தில் பாவிப்பதற்காக இரசாயன ஆயுதங்களை அரசு கொள்வனவு செய்துள்ளதாகச் செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இந்தச் செய்திகள் உண்மையாக இருந்தால், இதனால் பாதிக்கப்படப் போவது தமிழ் மக்களேயாகும். எனவே இந்த ஆயுதங்களை யுத்த முனையில் பாவிக்கவேண்டாம் என உத்தரவிடுங்கள்" என்று அத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் எம்.மங்களநேசன் கொண்டுவர, மேயர் ஆமோதித்திருந்தார்.

புளொட் அமைப்பின் உறுப்பினர் மு.தவநாதன் கொண்டுவந்த கீழ்காணும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

★ சமூகச்சீர்கேடுகளை ஒழிப்பதற்கு ஒரு தினத்தைப் பிரகடனம் செய்தல்.

★ கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளின் சினிமாப் பகுதியில் ஆபாசமான விரசத்தைத் தூண்டும் படங்களைத் தடை செய்யுமாறு கோருதல்.

★ எதிர்வரும் காலங்களில் நல்லூர் உற்சவ காலத்தில் வீதித் தடைகளுக்கு அப்பால் கடைகளை அமைத்தல்.

(உ-3-9)

# தேசிய மட்ட விளையாட்டுப்போட்டி அடுத்த மாதம் குருநாகலில்

யாழ்ப்பாணம்,ஓக.21

வடக்கு - கிழக்கு மாகாண சபை விளையாட்டு அமைச்சினால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டி, தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள் அடுத்த மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை குருநாகலில் நடைபெறவுள்ள தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றத் தெரிவாகியுள்ள வீரர், வீராங்கனைகளின் பெயர்கள் வருமாறு:-

இ.உதயகுமார், க.இராசகுமார், எஸ்.பிலிப்பூபாலவெலிங்ரன், எஸ். ரஞ்சித்குமார், எஸ்.சுதேஸ்குமார், எம்.ஜோகேந்திரதாஸ், ரி.ஜெயந்தன், சி.ஏ.அரவிந்தன், எஸ்.சுரேன், ஏ.கமல கிறேசியன். கே.மிதிலா, பி.மைதிலி, எஸ். பகீர்தா, எஸ்.சுகிர்தா, ரி.கலைமகள், எஸ்.குகாஜினி, வி.சேந்தினி.

மேசைப்பந்தாட்ட ஆண்கள் அணிக்குத் தெரிவானோர் :-

ஜே.மோகன், பி.ஜெகதாசன், ஆர். சுகந்தன்.

மேசைப்பந்தாட்ட பெண்கள் அணிக்குத் தெரிவானோர்:-

எஸ்.ஸ்ரீமைதிலி, எஸ்.டொறிஸ் கமிலா, வி.கயல்விழி, எஸ்.பானுரேகா, எஸ்.சுகந்தினி.

வலைப்பந்தாட்ட அணிக்குத் தெரிவானோர்:-

பி.மைதிலி, எஸ்.குகாஜினி, ரி. சாந்திமதி, எம்.மாலினி, எஸ்.அஜந்தா, எஸ்.சிவகௌரி.

இவர்களில் வலைப்பந்தாட்ட அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள வீராங்கனைகள் எதிர்வரும் 30ஆம் திகதியும், ஏனையவர்கள் எதிர்வரும் 6ஆம் திகதியும் குருநாகலுக்கு புறப்பட்டுச் செல்ல உள்ளனர். (ஓ-6)

# முல்லைத்தீவில் விமானத் தாக்குதல்

கொழும்பு,ஓக.21

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நேற்று முன்தினம் பகல் 11.30 மணியளவில் விமானப்படையின் 'கிபீர்' குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் மேற்கொண்டதாகவும் -

தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை என்றும்-

விசேட ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (உ-ஓ)




நல்லூர் லயன்ஸ் கழகத்தினால் நவாலி மகேஸ்வரி இல்ல மாணவர்களுக்கு அண்மையில் ஒரு தொகுதி பாவனைப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மகேஸ்வரி இல்லத் தலைவரும், யாழ்.பிராந்திய இணைப்பாளருமான லயன் எஸ்.பத்மநாதனிடம் நல்லூர் அரிமாக்கழகத் தலைவர் லயன் வி.மாணிக்கம் பாவனைப் பொருள்களைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் நல்லூர் அரிமாக்கழக ரேமர் (Tamer) லயன் பி. பாலசங்கர் மற்றும் மாணவர்கள் காணப்படுகின்றனர். (ஐ-7)




வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையருக்கான வெளிநாட்டுக் கணக்கு சுன்னகம் இலங்கை வங்கிக் கிளையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம். அருகே சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் என்.சிவரத்தினமும் உள்ளார். *(படம்: வலிகாமம் தெற்குச் செய்தியாளர்)*

# கைதடி இல்ல முதியோருக்கு யாழ். றோட்டறிக் கழகம் உதவி

யாழ்ப்பாணம்,ஓக.21

மூளாயில் உள்ள தனியார் வைத்திய நிலையத்துடன் இயங்கும் கைதடி முதியோர் இல்லத்தில் ஒரு நாள் பொழுதைப் பகிர்ந்து கொள்ள யாழ்.றோட்டறிக் கழகம் முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி இடம் பெறும் இந்த நிகழ்வின் போது முதியோருக்கு ஒரு தொகுதிப் புத்தகங்கள், உள்ளக விளையாட்டு உபகரணங்கள், முதலுதவிப் பெட்டி, பூச்சி மருந்து ஆகியன வழங்கப்படவிருக்கின்றன.

பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் முதியோரின் ஆடல் பாடல்களும் அங்கு இடம்பெறும். யோகி சிவாவின் தியானப் பயிற்சியும் நடத்தப்படும்.

'மனிதம் எமது பணி' என்ற இவ்வருடத்துக்குரிய றோட்டறியின் மையக் கருத்துக்கமைய முதியோரை மதிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடாகியுள்ளது. (ஐ-3)


## ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் ஞாபகார்த்த ஓராம் ஆண்டு நினைவு தினப் போட்டிகள்

குருஷேத்திர மையத்திலிருந்து தன்னின மக்களின் உரிமைக்காகத் தனது பேனாவை ஆயுதமாக்கி உறுதியாகக் குரல் கொடுத்தவனும் எழுத்து, பேச்சு, ஊடகம் ஆகியவைகளின் சுதந்திர உரிமையாளனுமான ஊடகவியலாளன் மயில்வாகனம் நிமலராஜன் ஓராம் ஆண்டு நினைவாக இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன.

- வயதுக் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி எவரும் பங்கெடுத்துக் கொள்ளலாம்.
- மாணவர்களாயின் கல்வி கற்கும் வகுப்பு, பாடசாலை தொடர்பான விவரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
- போட்டிகளுக்கான முடிவு திகதி 19.09.2001
- கட்டுரைகள் தட்டச்சுத் தாளின் 4 பங்கங்களுக்கு மேற்படாமலும், கவிதைகள் தட்டச்சுத் தாளின் ஒரு பக்கத்துக்கு மேற்படாமலும் இருத்தல் நன்று.
- ஆக்கங்கள் சாதாரண தபால் மூலம்

*"நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு"*
*இல.19, கொழும்புத்துறை வீதி,*
*கண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

★ *கட்டுரைக்கான தலைப்புகள்:*

1) தனி மனித சுதந்திரமும், சமூக சுதந்திரமும்
2) யாழ்.குடாநாடு.... ஊடகங்களின் பங்களிப்பு
3) சமூக விடுதலையில், ஊடகவியலாளர்களின் பங்கு.

★ *கவிதைக்கான தலைப்பு:*

யுத்தமும் நானும்.....

(C/17947) ~ நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு.



1991 ஆம் ஆண்டு ரஷ்யாவில் அதிபர் மிகையில் கொப்பர்ச்சேவை பதவி கவிழ்ப்பதற்காக கடும்போக்கு கம்யூனிஸ்டுகள் மேற்கொண்ட சதிப் புரட்சியின் 10 ஆண்டு நிறைவு தினம் கடந்த வாரம் மொஸ்கோவில் நினைவு கூரப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட நூற்றுக்கணக்கானோர் மொஸ்கோவில் உள்ள ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான 'கிரெம்ளின்' முன்பாக கூடி நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் சிலர் ரஷ்ய தேசிய கொடியைத் தாங்கியவாறு 'ஒன்று பட்டால் வெல்லாம்' என்ற முன்னாள் பிரதமர் பொரிஸ் ஜெல்சினின் வாக்கியம் எழுதப்பட்ட மட்டையை தாங்கி நிற்பதையும் ரஷ்யப் பிரதமர் விளாடிமீர் புடின் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பத்திரிகை நிருபருடன் உரையாடுவதையும் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ரஷ்யப் படைகள் சார்பாக சண்டையிட்ட மூத்த படை அதிகாரி ஒருவர் தனது நண்பரை முத்தமிடுவதையும் படங்களில் காணலாம்.

# 11ஆவது சார்க் மாநாடு டிசெம்பரில் நடைபெறாது!

## புதிய திகதி விரைவில் அறிவிப்பு

புதுடில்லி,ஓக.21

பதினொராவது 'சார்க்' உச்சி மாநாடு இவ்வாண்டு டிசம்பர் மாதம் 28ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை காத்மண்டுவில் நடைபெறும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் மாநாடு அத்திகதிகளில் நடைபெறமாட்டாது என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டின் இறுதியில் 'சார்க்' உச்சிமாநாடு நடைபெறுமென கடந்த வாரம் நேபாளம் அறிவித்திருந்தது. ஆனால், நேபாளத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் மாநாட்டை நடத்துவதற்கு இந்தியா மட்டுமே சம்மதம் தெரிவித்துள்ளது. இதையடுத்தே இவ்வமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகளுடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின் புதிய திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உச்சிமாடு 1999ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நேபாளத்தில் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், பாகிஸ்தானில் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட நவாஷ் ஷெரீப்பின் ஆட்சியை இராணுவம் சதிப்புரட்சி மூலம் கைப்பற்றியதையடுத்து இவ்வுச்சி மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியா மறுத்து விட்டது.

'சார்க்' அமைப்பின் கொள்கை விதிகளின்படி அவ்வமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் கலந்துகொண்டால் மட்டுமே உச்சிமாநாட்டை நடத்தமுடியும்.

இதன் காரணமாகவே 1999இல் இவ்வுச்சி மாநாடு நடைபெறவில்லை. (ஐ)

# மஸிடோனியாவுக்கு படை அனுப்ப அமெரிக்கா மறுப்புத் தெரிவிப்பு

ஸ்கொப்ஜே,ஓக.21

மஸிடோனியாவுக்கு தனது துருப்புக்களை அனுப்பி வைப்பதற்கு அமெரிக்கா மறுப்புத் தெரிவித்துள்ளது.

அல்பேனியப் போராளிகளுக்கும், மஸிடோனிய இராணுவத்துக்கும் இடையிலான மோதல்களின் நடுவில் நேட்டோத் துருப்பினர் சிக்கிக்கொள்ளக் கூடும் என்றும், அது அச்சம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை -

மஸிடோனிய அரசாங்கத்துக்கும், அல்பேனியக் கெரிலாக்களுக்கும் இடையிலான யுத்தநிறுத்தம் வலுவடையும் வரை தனது துருப்புக்களை முழுமையாக அப்பகுதிக்கு அனுப்ப் போவதில்லை எனத் தெரிவித்துள்ள நேட்டோ தனது துருப்பினர் கொந்தளிப்பான முன்னரங்கப் பகுதிகளில் நடைபெறும் மோதல்களில் சிக்கிக் கொள்ளக்கூடும் என்ற அச்சத்தையும் வெளியிட்டுள்ளது.

வடபகுதியிலுள்ள போர் முனைகளில் அமைதி நிலவுகின்றதாக மஸிடோனியப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளபோதிலும் பிரிட்டிஷ் அதிகாரிகள் நேட்டோவின் பாரிய படையணியொன்றை நிலைகொள்ளச் செயயும் அளவுக்கு நிலைமை பாதுகாப்பாகவில்லை எனத் தெரிவித்துள்ளனர். யுத்தநிறுத்த மீறல்களைச் சுட்டிக் காட்டியுள்ள பிரிட்டிஷ் அதிகாரிகள் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அவை நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

நேட்டோவின் பிரதம தளபதிகளால் விடுக்கப்படுகின்ற அறிக்கைகளைத் தொடர்ந்தே மஸிடோனியாவுக்கு துருப்புக்களை அனுப்பி வைப்பது குறித்துத் தீர்மானிக்கப்படலாம் எனத தெரிவிவிக்கப்படுகின்றது. ஞாயிற்றுக்கிழமை பிரிட்டனின் 400 பேரைக் கொண்ட படையணி ஒன்று மஸிடோனியா வந்து சேர்ந்துள்ள போதிலும் நேட்டோவின் அத்தியாவசியமான நடவடிக்கைகள் வெற்றி அளிக்குமா என்ற பலத்த சந்தேகமும் எழுப்பப்பட்டுள்ளது. மஸிடோனிய பொது மக்கள் மத்தியில் நேட்டோ குறித்து அவநம்பிக்கை நிலவுகின்றது. அல்பேனிய தேசிய விடுதலை ராணுவத்தின் நடவடிக்கைகளை நேட்டோ தடுத்து நிறுத்தவில்லை எனவும் கொசோவோவில் இருந்து அல்பேனியக் கெரில்லாக்களுக்கு ஆயுதங்கள் வருவதை அது கட்டுப்படுத்தவில்லை எனவும் அவர்கள் குற்றம் சாட்டுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை -

மஸிடோனியர்களுக்கும், அல்பேனியக் கெரில்லாக்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் நாடாளுமன்றதால் அலட்சியப்படுத்தப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. மஸிடோனிய உளவுப் பிரிவு இந்த ஒப்பந்தங்கள் குறித்து அவநம்பிக்கை வெளியிட்டுள்ளது. மஸிடோனிய பொதுமக்களும் அல்பேனியத் தேசிய விடுதலை இராணுவத்தின் செயற்பாடுகள் குறித்து அச்சம் வெளியிட்டுள்ளனர். (ம)

# மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட படையினருக்குப் பொதுமன்னிப்பு!

## இந்திய அரசு ஆராய்கின்றது

புதுடில்லி,ஓக.21

தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் படையினருக்குப் பொது மன்னிப்பு வழங்குவது குறித்து இந்திய அரசு ஆராய்ந்து வருவதாக உள துறை அமைச்சர் எல்.கே.அத்வானி தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தின் ஜலந்தரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலக அரங்கில்

படையினருக்குப் பொதுமன்னிப்பு வழங்குவது குறித்த வழிமுறைகளை வகுப்பதற்காக உள்துறை அமைச்சு சட்ட அமைச்சுடன் விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்கும் என்றும் -

ஜனநாயக நீரோட்டத்தில் இணைய விரும்பும் முன்னாள் தீவிரவாதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படமாட்டாது என்றும் -

எல்.கே.அத்வானி மேலும் தெரிவித்தார். (ஐ-7-9)

# உள்ளூராட்சித் தேர்தல்களில் பா.ம.க. தனித்துப் போட்டியிடும்

## டாக்டர் ராமதாஸ் அறிவிப்பு

சென்னை,ஓக.21

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலல் பா.ம.க. தனித்துப் போட்டியிடும் என்று கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் அறிவித்துள்ளார்.

ஆண்டிமடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பா.ம.க. சுயமரியாதை உடைய கட்சி என்றும், இதனாலேயே உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட தமது கட்சி முடிவு செய்துள்ளது என்றும் -

இந்த வழிமுறையைப் பின்பற்றி ஏனைய கட்சிகளும் தனித்துப் போட்டியிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் -

டாக்டர் ராமதாஸ் கூட்டத்தில் தெரிவித்தார்.

தேர்தல்களுக்காக முதலமைச்சர் ஜெயலலிதாவையோ, தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியையோ சந்திக்க வேண்டிய அவசியம் தனது கட்சிக்கு இல்லை என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (ம-7-9)

## ஜெயலலிதாவுடன் தர்க்கத்தில் ஈடுபட்ட

# தி.மு.க.சட்டப்பேரவை உறுப்பினர் இரு நாள்களுக்கு தற்காலிக நீக்கம்

சென்னை,ஓக.21

தி.மு.கவைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினரும், முன்னாள் துணை சபாநாயகருமான வழுதி இளம்பருதி சட்டப் பேரவையில் இருந்து நேற்று முதல் இரண்டு நாளகளுக்கு தற்காலிக நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழக அரசின் 'பட்ஜெட்' தொடர்பான விவாதம் நேற்றுக் காலை சட்டப்பேரவையில் ஆரம்பமானது.

விவாதத்தின் ஆரம்பத்தில் சட்டப் பேரவை உறுப்பினர் வழுதி இளம்பருதிக்கும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் இடையில் "தரிசுநில அபிவிருத்தித் திட்டம்" குறித்து கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து தி.மு.க. உறுப்பினர்களும், அ.தி.மு.க. உறுப்பினர்களும் மேற்படி விடயம் குறித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் சட்டப் பேரவையின் செயற்பாடுகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இதனை அடுத்து சட்டப் பேரவை சபாநாயகர் ப.காளிமுத்து வழுதி இளம் பருதியை இரண்டு நாள்களுக்கு தற்காலிக இடைநீக்கம் செய்வதாக அறிவித்தார். (ம-7)

# மூலிகை மருந்து உட்கொண்ட 13 கிராமவாசிகள் உயிரிழப்பு

## ஆந்திர மாநிலத்தில் சம்பவம்

புதுடில்லி,ஓக.21

இந்தியாவின் ஆந்திர மாநிலம் மேடக்மாசார் கிராமத்தில் மூலிகை மருந்து உண்ட 13 கிராமவாசிகள் உயிரிழந்துள்ளனர். மேலும் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதேவேளை -

மேற்படி மூலிகை மருந்துகளை விநியோகித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு வைத்தியர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7-9)



பிலிப்பைன்ஸில் கடந்த வாரம் ஹொட்டேல் ஒன்றில் இடம்பெற்ற மோசமான தீ விபத்தில் குழந்தைகள் உட்பட 75 பேர் தீயில் எரிந்தும் மூச்சுத்திணறியும் உயிரிழந்தமை தெரிந்ததே. தீ விபத்து இடம்பெற்ற 'மனோர்' எனப்படும் ஹொட்டேலின் முகப்புத் தோற்றத்தை முதலாவது படத்தில் காணலாம்.

இந்த ஹோட்டேலின் அறைக் கதவுகளும், ஜன்னல்களும் இறுக்கி மூடப்பட்டிருந்தன. ஆபத்துக் காலத்தில் வெளியேறுவதற்கான பாதுகாப்பான வாயில்கள் எதுவும் அங்கு இருக்கவில்லை. இதுவே பலர் உயிர் இழக்க காரணமானது. இந்த விபத்தில் காயமடைந்தவர்களை மீட்புப் பணியாளர்கள் மீட்டு கட்டடத்துக்கு வெளியே அழைத்து வருவதையும், உயிரிழந்தவர்களின் சடலங்கள் அடையாளம் காண்பதற்காகத் துணிகளால் மூடப்பட்டு வைக்கப்பட்டிருப்பதையும், உயிரிழந்த ஒருவரின் உறவினர்கள் கதறி அழுவதையும் மற்றைய படங்களில் காணலாம்.

# ரூ. 6 கோடி 60 லட்சம் தேவை; கிடைத்ததோ ரூ. 10 லட்சமே!

## யாழ். மாநகரசபை நிலை குறித்து மேயர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 21

வடக்கில் மிக முக்கியமான ஒரு சபையாக இயங்கிக் கொண்டிருக்கும் யாழ். மாநகர சபைக்கு வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் 660 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்யக் கேட்டிருந்தபோதும் இதுவரை அரசு 10 லட்சம் ரூபாவை மட்டுமே வழங்கியிருக்கிறது.

யாழ். மாநகர முதல்வர் என். ரவிராஜ் நேற்றுக் காலை யாழ். மாநகரசபை அலுவலகத்தில் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் இந்தத் தகவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாநகர சபைக்கு வட மாகாண மீள் குடியேற்ற புனர்வாழ்வு அதிகார சபையிடம் இருந்தோ (நான்) வடக்கு — கிழக்கு மாகாண சபையிடம் இருந்தோ இதுவரை எந்தவிதமான நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. நிதி ஒதுக்கீட்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதமே அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற போது வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரிடமும்,

வடக்கு— கிழக்கு மாகாண ஆளுநரிடமும் மீண்டும் வரவு— செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அடிக்கடி இது குறித்து நினைவூட்டப்பட்டும் வந்திருக்கின்றது. புனர்வாழ்வு அமைச்சரைச்சந்திக்க கடந்த பலவாரகாலமாக நாம் முயற்சி செய்து வருகின்றோம். எனினும் எமக்கு அதற்குரிய நேரம் ஒதுக்கித்தரப்படவில்லை.

ஏறத்தாழ 50 லட்சம் ரூபா பெறுமதியான நடவடிக்கைகளை எமது சபையின் நிதியிலிருந்து மேற்கொண்டுள்ளோம். தற்போது நிதி கையிருப்பில் போதுமானதாக இல்லாமையினால் பல நடவடிக்கைகள் தாமதப்படுத்தப்படுகின்றன.

### இளைஞர்களின் அடாவடித்தனம்

தமிழர்களின் பாரம்பரிய பூமியான நல்லூரில் — கலாசாரத்தின் சின்னமாக விளங்கும் நகரில் — இளைஞர்கள் பலர் எல்லை மீறிச்செயற்பட்டமை வரவேற்கத்தக்கதல்ல. இவர்களின் அநாகரிக செயற்பாடுகள் நாளுக்குநாள் அதிகரித்து வந்தன. குறிப்பாக வீதித்தடைகளை பலவந்தமாக அகற்றியபடி மோட்டார் சைக்கிள்களில் உள்நுழையும் குழுக்கள் குழந்தைகளுக்கும், யுவதிகள் மற்றும் வயதானவர்களுக்கும் பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்திவந்தார்கள். இதனாலேயே ஆலயப்பகுதிக்குள் வீதித்தடைகளைப் பேணுவதற்காக பொலிஸாரை அழைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை எமக்கு ஏற்பட்டது. அவர்கள் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படவில்லை. எனினும் பொலீஸார் தமது மேலதிக பாதுகாப்பிற்காகப்பின்னர் படையினரை வரவழைத்தனர்

கடந்த சனிக்கிழமை தீர்த்த உற்சவ தினத்தன்று மாலை அனுமதி வழங்கப்படாத இடத்தில் வைத்து கச்சான் வியாபாரம் செய்து வந்த ஒரு தாயுடன் ஏற்பட்ட சிறிய குழப்பம் சமரசமாகத் தீர்க்கப்பட்டது. எனினும் பின்னர் வந்த ஒரு குழு மிகவும் பாரதூரமான முறையில் நடந்து கொண்டமை மனவருத்தத்திற்குரியது — கண்டிக்கத்தக்கது. இக்குழுவில் 20 வயதுக்குட்பட்டவர்களே அதிகளவில் காணப்பட்டனர் — என்று மேயர் தெரிவித்தார்.

### மங்களநேசன்

சபையில் பிரேரணைகளை முன்வைத்து உரையாற்றிய யாழ். மாநகர சபை ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர் எம். மங்களநேசன், இலங்கை அரசாங்கம் இந்த யுத்தத்தில் பாவிப்பதற்காக இரசாயன ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளன. இவ்விடயம் உண்மையாயின் இதனால் பாதிக்கப்படப்போவது தமிழ் பேசும் மக்களே! ஆகவே அவற்றை கொள்வனவு செய்திருந்தாலும் பாவனைக்கு எடுக்கக்கூடாது என ஜனாதிபதிக்கு இச்சபை கோரிக்கை விடுக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் விபச்சார நடவடிக்கைகளுக்கு யாழ். போதனா வைத்திய சாலை வட்டாரங்கள் உடந்தையாக இருப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

விபச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு அதற்கான காரணத்தைக் கண்டறிந்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் உரிய தரப்புக்கள் ஈடுபடவேண்டும். அவர்களின் வறுமை நிலையைப் போக்க வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும் — என்றார்.

யாழ். மாநகர சபை புளொட் உறுப்பினர் முத்துக்குமாரு தவநாதன் சமூகச் சீர்கேடுகள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்து உரையாற்றினார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் தமிழ்ப் பத்திரிகைகளில் — சினிமாப் பகுதிகளில் — ஆபாசமான, விரசத்தைத் தூண்டும் காட்சிகள் இடம்பெறுவதைத் தவிர்க்க வேண்டும். அத்துடன் சமூகச் சீர்கேடுகளை ஒழிப்பதற்கான தினம் ஒன்றையும் பிரகடனப் படுத்த வேண்டும் — என்று அவர் கோரினார்.

எதிர்வரும் காலங்களில் நல்லூர் உற்சவ காலத்தில் வியாபாரக் கடைகளை வீதித்தடை எல்லைகளுக்கு வெளியே அமைப்பதன்மூலம் பக்தர்களின் சௌகரியம் பேணப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்புப் பகுதிகளைப் போன்று இங்கே ஆரம்ப கட்டமாகக் குறிப்பிட்ட சில இடங்களில் பிளாஸ்ரிக் வாளிகளை வைப்பதன் மூலம் குப்பைகளைச் சேகரித்து அகற்றமுடியும் என்று முதல்வர் ரவிராஜ் முன்வைத்த யோசனைகளை யாழ். மாநகரசபை சுகாதாரப் பொறியியல் பிரிவுப் பொறுப்பதிகாரி பி. ஜீவரட்ணம் நிராகரித்தார்.

மாற்று யோசனைகளை முன்வைத்து உரையாற்றிய சபை ஈ.பி.டி.பி. உறுப்பினர் கிங்ஸ்லி கணேசன் —

சனநடமாட்டம் குறைந்த ஒதுக்குப்புறமான இடங்களைத் தெரிவு செய்து குப்பைகளைச் சேர்த்து பின்னர் அவற்றை அகற்றலாம். இதற்குரிய இடங்களைத் தெரிவுசெய்யும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

கண்ணாதிட்டிப் பகுதியில் தேநீர்ச் கடை ஒன்று சட்டவிரோதமான முறையில் நீர் விநியோகக் குழாயில் இணைப்பை ஏற்படுத்தி நீரைப் பெற்றுக்கொள்வதாக அறியவருகிறது. இதனை விசாரிக்கச் சென்ற குழுவும் அவர்களால் நன்கு கவனிக்கப்பட்டமையினால் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை—என்றார்.

(ஐ-9)

# மாணவர் மீதான தாக்குதல்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்

## குண்டு வீச்சைக் கண்டித்து ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 21

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து நடத்தப்படும் போர் முறைகளை உடன் நிறுத்த வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

விசுவமடுவில்கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வீச்சுச் சம்பவத்தில் மாணவன் ஒருவன் கொல்லப்பட்டதைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 13 ஆம் திகதி யன்று விஸ்வமடுப் பகுதியில் இடம்பெற்ற விமானப் படையினரின் மிலேச்சத்தனமான குண்டு வீச்சினால் அப்பாவிப் பாடசாலை மாணவனான பரமகுலசிங்கம் ஜெகன் என்பவர் கொல்லப்பட்டமையை எமது ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இலங்கை விமானப்படையினர் பல ஆண்டுகளாக மக்கள்குடியிருப்புகள், அப்பாவிப் பொதுமக்கள், பாடசாலைகள், தேவாலயங்கள், சொத்துக்கள் என்பவற்றின் மீது கண்மூடித்தனமாகக் குண்டு வீச்சுகள் நடத்தி வருகின்றன. இந்த வரிசையிலேயே மேற்படி மாணவனும் கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவமானது பாடசாலை மாணவர்களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் இன்னல்படுத்தும் அரசின் நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

எனவே இவ்வாறு பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து நடத்தப்படும் கொடிய போர் முறைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். அல்லது மாணவர்களின் கடும் போராட்டங்களை அரசு சந்திக்க வேண்டி வரும்.

அரசின் இத்தகைய ஈவிரக்கமற்ற தாக்குதல்களை சகல உலக சமூகத்தினரும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம் — என்றுள்ளது.

(ஐ-3)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக. 21

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலில் ஆவணிச் சதுர்த்தித் திருவிழா நாளை புதன்கிழமை காலை 1008 சங்காபிஷேகத்துடன் நடைபெறும். தொடர்ந்து மாலை 6 மணிக்கு உற்சவம் இடம்பெறும். உற்சவக் கிரியைகளை சிவஸ்ரீ சதா. யோகீஸ்வரக்குருக்கள் மேற்கொள்வார். (ஐ)

★ ★ ★

சங்குவேலி ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளி மாலை ஐந்து மணிக்கு சப்பறத்திருவிழாவும், மறுநாள் முதலாம் திகதி சனிக்கிழமை பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும், இரண்டாம்திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்குத் தீர்த் தோற்சமும் நடைபெறும். (ம-7-152)

★ ★ ★

ஆவணிச் சதுர்த்தி உற்சவத்தையொட்டி அல்வாய் குமுமுடி விநாயகர் ஆலயத்தில் நாளை புதன்கிழமை இரவு 7.00 மணிக்கு ''கோவலன் கண்ணகி'' என்னும் இசை நாடகம் பேடையேற்றப்படவுள்ளது.

பளை ஸ்ரீசக்தி கான சபா, பளை ஸ்ரீரங்ககானசபா, குமிழடி விநாயகர் நாடக மன்றம் ஆகியவற்றின் கலைஞர்கள் இணைந்து இந் நாடகத்தினை மேடையேற்றவுள்ளனர்.

பளை ஸ்ரீரங்க கான சபாவைச் சேர்ந்த கலைஞர் க. கனகரத்தினம் இந் நிகழ்வில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார். (7-117)

ஆனைக்கோட்டை உயரப்புலம் ஸ்ரீ உந்துங்க விநாயகர் ஆலயத்தில் ஆவணிச்சதுர்த்தி விழா நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து விநாயகப்பெருமான் தேரில் வீதி உலா வருவார்.

மாலை 6.30 மணிக்கு ஆசிரியர் ஆறு. திருமுருகனின் '' விநாயகரின் மகிமை '' பற்றிய சமயச் சொற்பொழிவு இடம்பெறும். (ம-152)

★ ★ ★

வண்ணை — சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் பிற்பகல் 4மணிக்கு ஸ்நபன அபிஷேகத்துடன் திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை நடைபெறும். (ஐ-7)

★ ★ ★

ஏழாலை அருள்மிகு சிவபூதவராயர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு 108 சங்காபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து விசேட பூசை, அன்னதானம், மாலை 6 மணிக்கு திருவூஞ்சல், சுவாமி வீதியுலா வருதல் இடம்பெறும். (ஐ-7)

★ ★ ★

இணுவில் விசாலாட்சி சமேத விஸ்வேஸ்வரசுவாமி ஆலயத்தில் நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு வசந்தமண்டப கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ம-7)

# குருநகர் களஞ்சிய திருட்டுக் குறித்து நாளை விசாரணை

குருநகர் களஞ்சியத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் திருட்டுத் தொடர்பான வழக்கு விசாரணை, நாளை புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் நீதிபதி பிறேம் சங்கர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

யாழ். நீதிவான் நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்ட மேற்படி வழக்கை வேறு நீதிபதி முன் விசாரரிக்க உத்தரவிடுமாறு கோரி எதிராளிகள் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின் முடிவில் வழங்கப்பட்ட ஆணையின் படியே மேற்படி வழக்கு சாவகச்சேரி நீதிமன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# கோயிலுக்கு சென்றவரை காணவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 21

கோயிலுக்குச் செல்வதாகக் கூறிவிட்டுக் கடந்த வெள்ளிக்கிழமை வீட்டில் இருந்து புறப்பட்டவர் நேற்றுவரை வீடு திரும்பவில்லை என்று அவரது தந்தையார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த தருமு பிரதிபன் (வயது 21) என்பவரையே காணவில்லை என்று அவரது தந்தையான சி. தருமு இந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ஓ-3)

# தீக்காயம்

வவுனியா, ஓக. 21

சுண்டுக்குளம் பகுதியில் குப்பி விளக்கு ஒன்று தவறி வீழ்ந்து தீ பற்றியதில் இரு சகோதரர்கள் எரிகாயங்களுக்கு உள்ளானார்கள்.

கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கட்டைக்காட்டைச் சேர்ந்த றெஜினோல்ட் (வயது 15) மற்றும் அவரது சகோதரி யமனேரி அனிஸ்ரா (வயது 8) ஆகியோரே காயம் அடைந்து புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-3)

# ஆலோசனைக் கூட்டம்

நெல்லியடி, ஓக. 21

துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவ ஏற்பாடுகள் சம்பந்தமான கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திருவிழாச்சமயத்தில் குடி நீர், சுகாதாரம், சில்லறைக்கடை அமைத்தல், போக்குவரத்து ஆகிய வசதிகளைச் செய்வது குறித்து ஆராயப்படும்.

இதில் பாதுகாப்புப்படை, தொண்டர் சங்கங்கள், சாரணர் குழு, மக்கள் நலன்காக்கும் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். (ஓ-109)

## உதயன்

### முருங்கை மரத்தில் மீண்டும் ஏறுவதா?

நாடெங்கும் பேச்சுப் பேச்சென்று பெரும் பேச்சு. ஆனால் பேச்சு நடப்பதாகக் காணோம்.

சமாதானத்தை அடைவதற்காக விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து பேச்சு நடத்த அரசு தயாராக இருக்கிறது என்று தமது வழமையான பாணியில் மீண்டும் ஒரு தடவை அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவது குறித்து அரசுத் தரப்பில் முடிவெடுக்க வேண்டிய உச்ச அதிகாரத்தில் உள்ளவர் ஜனாதிபதி. அவரே திரும்பத் திரும்ப பேச்சுக்குத் தயார் என்று அறிவிக்கின்றார். விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்கான கதவுகள் இன்னமும் கூட திறந்திருக்கின்றன என்று திரும்பத் திரும்பக் கூறுகின்றார்கள். நோர்வேயும் கூட தமது மத்தியஸ்தப் பணியைத் தொடர்வதற்குத் தயாராக இருப்பதாகக் கூறுகின்றது.

பேச்சு என்று பேசப்படுகின்றது. ஆனால் அந்தப் பேச்சு முயற்சிக்கு மூச்சைக் காணோம்.

சம்பந்தப்பட்ட தரப்புகள் எல்லாம் பேச்சுக்குத் தயார் என்று அடிக்கொரு தடவை அறிவிக்கின்றன. ஆனால் பேச்சு ஆரம்பித்தபாடாக இல்லை. இது ஏன் என்று புரியாமல் விழி பிதுங்கின்றார்கள் பொதுமக்கள்.

கட்டுநாயக்காத் தாக்குதலின் பாதிப்பு ஒவ்வொன்றாகத் தெரியத் தெரிய - புரியப் புரிய - வேதாளம் முருங்கை மரத்திலிருந்து இறங்குவது போல, தமது நிலைப்பாட்டிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக தீவிர யுத்தப் பிடியைத் தளர்த்தி, பேச்சு என்ற தரையை நோக்கி இறங்கத் தொடங்கியது அரசு.

போர் ஆபத்துக் காரணமாக இலங்கை சர்வதேச விமான நிலையம் மற்றும் துறைமுகங்களுக்கு விமானங்கள், கப்பல்கள் வந்து செல்வதற்கான காப்புறுதிக் கட்டணங்களை காப்புறுதி நிறுவனங்கள் கிடுகிடுவென உயர்த்தியபோது அதிர்ந்துபோன இலங்கை அரசு அதனைச் சமாளிப்பதற்கு - நாட்டில் சமாதான நிலைமை உள்ளது; போராபத்து இல்லை என்று காப்புறுதி நிறுவனங்களுக்குக் காட்டுவதற்கு - யுத்தப் பிடியைத் தளர்த்தி பேச்சு மேசையைப்பற்றிப் பேச ஆரம்பித்தது.

ஆனால் இப்போது, காப்புறுதி நிறுவனங்களுடன் இலங்கை அரசுத் தரப்பு நடத்திய பேச்சுக்கள் இணக்க நிலையை அடைந்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன; சர்வதேச விமான நிலையம், துறைமுகங்கள் ஆகியவை மீது எந்தத் தாக்குதல் நடந்தாலும் முதல் கட்ட காப்புறுதிப் பணமாக ஐம்பது மில்லியன் அமெரிக்க டொலர்களை (சுமார் ஐந்நூறு கோடி ரூபா) இலங்கை அரசு செலுத்தத் தயார் என்று தங்களுடன் அரசு ஒப்பந்தம் செய்யுமானால், காப்புறுதிக் கட்டணத்தைக் குறைக்கலாம் என்று பிரபல காப்புறுதி நிறுவனமான லொயிட்ஸ் கம்பனி அரசுத்தரப்புக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றது.

இந்த ஒப்பந்தத்தை இப்போது செய்வதால் அரசுக்கு ஒன்றும் தற்போது செலவு வந்துவிடப்போவதில்லை. வெறும் காகித ஒப்பந்தம் தான். விமான நிலையத்தில் அல்லது துறைமுகத்தில் சர்வதேச விமானச் சேவை விமானம் அல்லது கப்பல் மீண்டும் ஒருதடவை தாக்குதலுக்கு இலக்கானால்தான் அரசுக்கு உண்மை நெருக்கடி புரியும்.

இப்போது செலவில்லாத வெறும் வாக்குறுதியை ஒப்பந்தமாக வழங்கி, இப்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையைச் சமாளித்தால் போதும் என்ற முடிவில் அரசு நிச்சயம் அந்த வழியைத்தான் நாடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அப்படி ஒப்பந்தம் செய்தால் காப்புறுதிக் கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதால் ஏற்படும் பெரும் நிதி நெருக்கடியை இப்போதைக்கு அரசு தவிர்த்துக் கொள்ளமுடியும்.

அத்தகைய நிலையில் அரசு, தனது வழமையான போக்குப்படி, பேச்சென்ற பேச்சை விட்டுவிட்டு மீண்டும் யுத்த தீவிரத்தை நோக்கி நகரும் என்பதும் திண்ணம்; அதாவது முருங்கை மரத்திலிருந்து இறங்கத் தொடங்கிய வேதாளம் மீண்டும் மரத்தில் ஏறத் தொடங்கிவிடும்.

முருங்கை மரம் பலமான தொன்றல்ல. எந்தச் சமயத்திலும் அதன் கொப்புகளும், கிளைகளும் பாரம் தாங்காமல் முறிந்து விழக் கூடியவை. எனவே யுத்தம் என்ற முருங்கை மரத்தில் ஏறுவதை விடுத்து சமாதானம் என்ற சமதரையை நோக்கி இறங்குவதுதான் நல்லது என்பதை சம்பந்தப்பட்டோர் புரிந்துகொள்ள வேண்டும்.

# சாவகச்சேரியில் வசிப்போருக்கு படையினர் அரிசி வழங்கினர்

யாழ்ப்பாணம்,ஓக.21

சாவகச்சேரிப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்குப் படையினர் அரிசி மற்றும் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளதாக யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்புத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்தம் காரணமாக கடந்த வருடம் நடுப்பகுதியில் சாவகச்சேரிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் பல்வேறு இடங்களில் தற்காலிகமாக வசித்துவந்தனர். எனினும் சாவகச்சேரிப் பகுதி படையினரால் மீட்கப்பட்டதை அடுத்து கடந்த 10ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரைக்கும் 72 குடும்பங்கள் அங்கு மீளக் குடியமர்ந்துள்ளன.

52 ஆவது படையணிப் பிரதேசத்துக்குட்பட்ட சாவகச்சேரிப் பகுதியில மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு மேலதிகமான நிவாரண உதவியாக 522ஆவது படையணியின் கட்டளை அதிகாரியின் ஆலோசனைக்கமைய - 11ஆவது கஜபா படைப் பிரிவின் கட்டளை அதிகாரியினால் ஆயிரம் கிலோ அரிசி மற்றும் உணவுப் பொருள்கள் கடந்த 16ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 கிலோ அரிசி வீதம் 72 குடும்பங்களைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்கள் இந்த நிவாரண உதவிகளை பெற்றுக் கொண்டனர் - என்று அதில் உள்ளது.

(ஐ-7)

### நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவில்

# பார்வை குறைந்தவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள்

யாழ்ப்பாணம்,ஓக.21

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுப் பிரிவினரால் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள கண் பார்வை குறைந்த 100பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைப் பிரிவில் உள்ளவர்கள் மேற்படி மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியும் என இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுப் பிரிவுக்கான தலைவர் எட்வேட் அருந்தவசீலன் தெரிவித்தார்.

யாழ்.லாவண்யா மூக்குக்கண்ணாடி நிறுவனத்தினர் இந்தக் கண்ணாடிகளை வழங்க முன்வந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

(ம-7)

### செய்தியாளர் தாக்கப்பட்டதற்கு

# விமானப்படைத் தளபதி வருத்தம் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.21

கடந்த சனியன்று கட்டுநாயக்கா சீதுவைப் பகுதியில் 'மிக்' யுத்த விமானம் வீழ்ந்து நொறுங்கிய இடத்துக்குச் செய்தி சேகரிக்கச் சென்ற 'ஹிரு எப்.எம்' செய்தியாளர் விமானப் படை அதிகாரி ஒருவரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்காக விமானப் படைத் தளபதி ஏயார் மார்ஷல் ஜெயலத் ஜெயக்கொடி வருத்தம் தெரிவித்துள்ளார்.

'ஹிரு எப்.எம்' செய்தியாளருக்கு ஏற்பட்ட எதிர்பாராத சம்பவத்திற்கு தமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதாக நடவடிக்கைத் தலைமைச் செயலகம், தேசிய பாதுகாப்பு அமைச்சின் ஊடாக ஞாயிற்றுக் கிழமை விடுத்துள்ள அறிக்கையில் விமானப்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

விமான விபத்து தொடர்பான செய்திகளை கடந்த 18ஆம் திகதி சேகரிக்கச் சென்ற செய்தியாளருக்கு ஏற்பட்ட அசௌகரியம் தொடர்பாக தான் வருந்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணைகளை மேற்கொண்டு அதற்கேற்ற தண்டனை வழங்கப்படவேண்டுமென்றும் பணிப்புரை விடுத்துள்ளார்.

(ஐ)

# வெளிநாடுகளில் புலனாய்வுப் பணியை விரிவுபடுத்துவதற்கு அரசு திட்டம்

கொழும்பு,ஓக.21

இலங்கை அரசு, வெளிநாடுகளில் புலனாய்வு நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்கவுள்ளது.

பிரான்ஸிற்குள் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உட்பட ஆறு முக்கியஸ்தர்கள் நுழைவதற்கு அந்நாடு தடை விதித்துள்ளதாக அண்மையில், இலங்கையின வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவு வழங்கிய பிழையான தகவல் வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவின் திறமையின்மையை வெளிப்படுத்தியதையடுத்தே பல மாற்றங்களுடன் வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவு விஸ்தரிக்கப்படவுள்ளது.

அதன் முதற்கட்டமாகப் பாரிஸிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் புலனாய்வுப் பிரிவில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கடுத்தபடியாகக் கனடா மற்றும் ஜேர்மனியிலும் புலனாய்வுப் பிரிவின் செயற்பாடுகள் வலுப்படுத்தப்படுவதுடன், மேலும் பல நாடுகளில் புலனாய்வுப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை -

பிரான்ஸ"க்குள் நுழையப் புலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசு வெளியிட்ட தகவலைப் பிரான்ஸ் முற்றாக மறுத்ததையடுத்து இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு சில உடனடி நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

உள்நாட்டு அல்லது வெளிநாட்டு புலனாய்வுத் தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெற்றால் அது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்து, அமைச்சின் முன் அனுமதி பெற்றபின்பே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிக்கைவிடவேண்டுமென அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா உத்தரவிட்டுள்ளார்.

இதேநேரம் மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அவர்களது முகாம்களுக்கு அருகிலிருப்போர் இடம்பெயர்ந்து 4 கி.மீ. தூரத்துக்கு அப்பாற் செல்லுமாறும், படையினர் பாரிய தாக்குதலைத் தொடுக்கப்போவதாகவும், மக்கள் இரு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சேகரித்து வைக்குமாறும் மட்டக்களப்புப் படைத் தலைமையகம் வெளியிட்ட துண்டுப் பிரசுரம் தொடர்பாகவும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக இராணுவத் தலைமையகம் விசாரணைகள் நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

### நாளை

ஆவணி 6
புதன்கிழமை
திதி: சதுர்த்தி
நள்ளிரவு : 12.7 வரை
நட்சத்திரம் : அத்தம்
பின்னிரவு 11.54 வரை
விநாயகர் சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 4.35 - 6.05
ராகுகாலம் : 12.05 - 1.35
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உலகத்தைத் துறப்பது என்றால் 'யான்' 'எனது' என்ற பற்றை அறுப்பதாகும்.

## நாட்டு நடப்பு

**செம்மறியும் நகர் பஸ்ஸ"ம்**

*கூடி ஒன்றாய் நிற்பதனால் கூட்டமாய் ஓடுவதால்*
*ஓடி உட்புகுந்து உரஞ்சுவதால் – வாடிப்போய்*
*முட்ட முட்ட நின்று மூச்சுத் திணறுதலால்*
*நாட்டுச் செம்மறியும் நகர் பஸ்ஸ"ம் ஒன்றென்றே நவில்.*

*- விகடகவி.*

# ஈழம் வாதிகளின் கையில் சிக்கியுள்ளது ஐ.தே.க.

### 'சிஹல உறுமய' பிரதிநிதி கூறுகிறார்

ஐக்கிய தேசியக் கட்சியினர் இன்று தனிநாடு கோரும் ஈழம் வாதிகள், அடிப்படை முஸ்லிம் வாதிகள் ஆகியோரின் சூழ்நிலைகளில் சிக்கியுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வரவேண்டுமானால் சிறுபான்மை மக்களின் பூரண ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி இரண்டும் யார் என்பது மக்களுக்குத் தெரியவேண்டும்.

இவ்வாறு அங்குருவாத்தொட்ட அம்பிட்டிகல ஸ்ரீ சுமங்கலாராம விகாரையில் நடைபெற்ற மத வைபவத்தில் உரையாற்றிய சிஹல உறுமய அமைப்பாளர் மஹேஸ் அத்தபத்து கூறினார்.

ரெலோவும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் வந்துள்ளன. புலிகளின் கருத்துக்களையே அவர்கள் வெளியிடுகின்றனர். விடுதலைப் புலிகள் மீதான தடைகளை நீக்குமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

முஸ்லிம்கள் தங்களுக்கு கிழக்கில் ஒரு நிர்வாக மாவட்டம் தேவை என்று கோரிக்கை விடுக்கின்றனர்.

ரவூப் ஹக்கீம் போன்ற அடிப்படை முஸ்லிம்வாதிகளினதும் விடுதலைப் புலிகளினதும் ஆதரவைப் பெற்றுக்கொண்டா ஐ.தே.க. ஆட்சிக்கு வரப்போகிறது? இதற்குச் சிங்கள மக்கள் ஆதரவு அளிக்கமாட்டார்கள் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ)

### உரிமை கோராத பசுமாடு

தென்மராட்சி,ஓக.21

கச்சாய் பகுதியிலிருந்து விற்பனைக்காக கடத்தி வரப்பட்டபோது கொடிகாமம் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்ட பசுமாடு ஒன்று உரிமை கோரப்படாத நிலையில் கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் கட்டிவைக்கப்பட்டுள்ளதாகவும், சுமார் இரண்டரை வயதுடைய இந்தப் பசுமாட்டின் உரிமையாளர் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-117)

### வீட்டு உதவிப் பொருள் விநியோகம்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்களுக்கான வீட்டுதவித் திட்டத்தின் கீழ் உதவி பெறும் 25 பயனாளிகளுக்கான வீடமைப்புக்குரிய உதவிப் பொருள்களை ஜேர்மன் தொண்டு நிறுவனத்தினர் (ஜி.ரி.இசற்) நேற்றுமுதல் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வருவதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(ஐ-72)

### நிவாரணப்பத்திரம் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஓக.21

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிலிருந்து கடந்த ஆண்டு மார்ச் மாதம் இடம்பெயர்ந்து ஏனைய இடங்களில் தற்காலிகமாக வசித்து வரும் குறைந்த வருமானம் பெறும் 'உ' நிவாரண அட்டை வைத்திருப்போருக்கு நிவாரணம் பெறுவதற்கான நிவாரண உத்தரவுப் பத்திரம் பளைப் பிரதேச செயலகத்தால் வழங்கப்படுகிறது.

இதுவரை மேற்படி பத்திரத்தைப் பெறாதோர் இன்று செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் பளைப் பிரதேச செயலக உப அலுவலகத்திலும் - நாளை புதன்கிழமை காலை 10 மணியளவில் பருத்தித் துறையில் இயங்கும் பளை பிரதேச செயலகத்திலும் நிவாரண அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய 'உ' பங்கீட்டு அட்டை விநியோகிக்கப்படவிருப்பதால் நிவாரண அனுமதிப்பத்திரம் பெறவரும் போது குடும்பத் தலைவர்கள் பழைய 'உ' அட்டை மற்றும் தமது குடும்பத்திலுள்ள சகல அங்கத்தவர்களினதும் தேசிய, விசேட அடையாள அட்டைகளை எடுத்து வரவேண்டும் என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(ஐ-7)


**கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!**



*வீடு பார்க்க சைக்கிளில் விரையும் இளைஞனே!*
*வீதியோரம் மிதிவெடிகள் மறைந்து கிடக்கலாம்*
*அவதானமாய் நீயும் நடந்துகொள்ளாவிடில்*
*அல்லல்படுவாய் வாழ்க்கை பூராக காலை இழந்து!*

**G.C.E. [A/L]**

**இரசாயனவியல்**

**விற்பனையாகின்றன**

- M.C.Q. [1], [2], [3]
  [1], [2], [3], [4], [5]
- Model Paper (2001)
  (கொழும்புப் பாடசாலை வினாத்தாளைக் கொண்டது)

விடைகள் விளக்கத்துடன்.

- Industrial Chemistry

(C-17929)

**by. த.முருகானந்தன் B.Sc.**

கிடைக்கும் இடம்: **Sivan Malikai Ltd.** 166, K.K.S. Road, Jaffna.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து
## HAPPY BIRTHDAY



**செல்வி லேனுகா**

சாரதா வீதி, சங்கத்தானையைச் சேர்ந்த
**நவரத்தினம் - வதனி** தம்பதிகளின்
செல்லப்புதல்வி

**லேனுகா**

தனது முதலாவது அகவை நிறைவை இன்று (21-08-2001) செவ்வாய்க்கிழமை வெகுவிமரிசையாக அளவெட்டியில் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்ஜயா, அம்மா, பெரிய அம்ஜயா, பெரியம்மா, ரூபன்மாமா (ஜேர்மனி), சொக்கன்மாமா (ஜேர்மனி), உதயன் மாமா (ஜேர்மனி), செந்த மாமா (ஜேர்மனி), ரமேஸ் மாமா (கனடா), சந்திரா பெரியம்மா (சுவிஸ்), தவம் பெரியம்மா (சுவிஸ்), கயந்தன் மாமா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்மன் கருணை பெற்று பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தற்காலிக முகவரி:
*செபஸ்தியார் கோயிலடி,*
*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*

(91133)

தகவல்:
மு.அரியரத்தினம்
(அம்ஜயா)

# 5 அமைச்சர்கள் இராஜினாமாக் கடிதம் வழங்கத் தயார்

கொழும்பு,ஓக.21

பிரதி அமைச்சர்களைத் தொடர்ந்து ஐந்து சிரேஷ்ட அமைச்சர்களும் திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளிக்க முன்வந்துள்ளனர்.

அமைச்சர்களான றெஜி ரணதுங்க, அலவி மௌலானா, பவித்திரா வன்னியாராச்சி, மில்ரோய் பெர்னாண்டோ, மஹிபால ஹேரத் ஆகியோரே ஜனாதிபதி மீதான தமது நம்பிக்கையை உறுதிப்படுத்தும் விதத்தில் இராஜினாமாக் கடிதங்களைக் கையளிக்க முன்வந்துள்ளனர்.

நல்லிணக்க அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து செயற்பட்டு வந்த சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள் கொண்ட குழு இராஜினாமாக் கடிதத்தைக் கையளிக்கப் பின்நிற்பதாகக் கூறப்படுகின்றது. (உ-3)

# ரயில் விபத்து: விசாரிக்கக் குழு

கொழும்பு,ஓக.21

பதுளையில் 15 பேரின் உயிரைச காவுகொண்ட ரயில் விபத்துப் பற்றி விசாரிப்பதற்காக ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி டி.எம்.எல்.டி. சில்வா தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே திணைக்களம் ஏற்கனவே ஆரம்பித்துள்ள விசாரணைகளுக்கு மேலதிகமாக இந்தக் குழுவின் பாரபட்சமற்ற விசாரணைகள் இடம்பெறுமென போக்குவரத்து அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை விபத்து நடந்த இடத்திற்குச் சென்ற அமைச்சர் திருத்த வேலைகளைத் துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

(ஐ-9)

# யாழ்.பஸ்நிலையத்தை சீரமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்.பஸ் தரிப்பு நிலையத்தை நவீனமயப்படுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்திருப்பதாக ஈ.பி.டி.பி. அறிவித்துள்ளது.


யாழ்ப்பாணம் பஸ் தரிப்பு நிலையத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது குண்டும், குழியுமாகக் காணப்படும் பஸ் நிலையப் பகுதிகளை சீராக்கம் செய்யவும், பஸ்நிலையப் பகுதியின் வடிகாலமைப்பு வசதிகளைப் புனரமைக்கவும், பொதுவான கட்டணக் கழிப்பிடம் அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.


- இப்படி ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

(உ)

# 12ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



**கதிர்காமத்தம்பி இரவீந்திரதாஸ்**
(ரவி)



**கதிர்காமத்தம்பி இராதாகிருஷ்ணன்**
(கண்ணன்)



**நாகமணி தில்லைநாதன்**
(நாதன்)

| | | கதிர்காமத்தம்பி இரவீந்திரதாஸ் | கதிர்காமத்தம்பி இராதாகிருஷ்ணன் | நாகமணி தில்லைநாதன் |
|---|---|---|---|---|
| மலர்வு | :- | 14.01.1958 | - 22.03.1962 | - 30.03.1959 |
| உதிர்வு | :- | - | - 21.08.1989 | - |
| திதி | :- | | 07.09.2001 | |

**மண்ணிற் தவழ்ந்தீர்கள்; மக்களென நின்றீர்கள்!**
**கண்ணில் துளிவடிய கைவிட்டுப் போனீர்கள்!**
**எண்ணம் உம் வடிவில் என்றென்றும் நின்றிலங்கும்!**
**விண்ணில் விடிவெள்ளியாகியே இலங்குங்கள்!**
**முற்றத்தில் உங்களடி தேடி யேங்குகிறோம்!**
**பெற்றபெரும் பேறறிந்து பரவுகிறோம் இறைவனடி!**

*வத்தனை,*
*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.*

(91330)

- பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

உ
கணபதி துணை

## வட்டுக்கோட்டை துணவி அரசடிப் பிள்ளையார் கோயில்
## வருடாந்த அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

விநாயக அடியார்களே!

22-08-2001 விநாயக சதுர்த்தி உற்சவம் மு.ப.10 மணிக்கு நடைபெறும். 24-08-2001 முதலாம் திருவிழா முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து 25-08-2001 சனிக்கிழமை தொடக்கம் 02-09-2001 ஞாயிறு வரை நிகழும். 2ஆம் தொடக்கம் 10 ஆம் திருவிழாக்கள் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

*உற்சவ பிரதமகுரு - வேதாகம கிரியா ஜோதி செ.க. சிவசுப்பிரமணிய குருக்கள்*
*ஆலய பூசகர் - பிரம்மஸ்ரீ ம.கேசவசர்மா*

மேற்படி உற்சவங்களில் கலந்துகொண்டு விநாயகப் பெருமானைத் தரிசித்து நல்லருளைப் பெறுமாறும் உலக சமாதானத்துக்காகப் பிரார்த்திக்குமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**"மேன்மைகொள் சைவநீதி, விளங்குக உலகமெல்லாம்"**

(91328) **- பரிபாலனசபை.**

## மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்
## பகிரங்க பிஸ்கால் ஏலவிற்பனை

கனகரத்தினம் கனகசுந்தரம்,
களபூமி, காரைநகர்.
தற்போது.இல.102,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**-வழக்காளி**

வழக்கு இல:- ஈடு/1850.

எதிராக

1. காலஞ்சென்ற கந்தசாமி யோகநாதன்
இல. 93, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

**-எதிராளி**

2. யோகநாதன் கைம்பெண் சூரியபிரபா,
இல. 93, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்,
இறந்த எதிராளியின் சட்டப் பிரதிநிதியாக
பதிலிடப்பட்ட எதிராளி.

2001.06.28ஆம் திகதி இம்மன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய துரைச்சாமி சிறீமோகன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும், எனக்களிக்கப்பட்ட விற்பனை அதிகாரத்திற்கமைவாகவும் இவ்விற்பனையை நடத்த மன்று நியமித்துள்ளதால் இதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விவரிக்கப்பட்ட அடுத்தடுத்துள்ள இரு ஆதனங்களையும் குறிப்பிட்ட ஆதனங்களில் நின்று (ஒன்று சேர்த்து) 2001ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 26ஆம் திகதி புதன்கிழமை (2001.09.26) காலை 11மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளி வழக்காளிக்கு ரூபா. 238,333.00வும் மேலும் ரூபா 125,000.00க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 48% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1984ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 05ஆந்திகதியில் இருந்து தீர்வைத் திகதியாகிய 1985ஆம் ஆண்டு ஆனி மாதம் 13ஆந்திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான நூற்றுக்கு 12% வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 8,729.08வும் கொடுக்கப்படவேண்டியுள்ளது.

### ஆதன அட்டவணை

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை:- "உசன்தறை" உறுதிப்படி நில.பர.4 குழி 16. அளவைக்காரன் சீ.இரத்தினசிங்கத்தால் அளந்து வரையப்பட்ட 1976.07.21ஆந்திகதி கொண்ட 384ஆம் இலக்கப்படத்தில் சுட்டப்படும் முதலாம் 2ஆம் துண்டுகள் கூடி படத்தின்படி நில.பர. 4 குழி 13. இதில் கூடி படத்தில் சுட்டப்படும் 1ஆம் துண்டு நில. பர. 1 குழி 3.28 - நிலப்பரப்பு ஒன்று குழி மூன்று தசம் இரண்டு எட்டும் கிணறும் பயிர்வகைகளும். எல்லை கிழக்கு புன்னாலை வீதி, வடக்கும் மேற்கும் தருமலிங்கம் சோமசுந்தரத்தின் ஆதனம். தெற்கு கூடி படத்தில் 2ஆம் துண்டாகிய எனது ஆதனம். இதடங்கலும் பதிவு டி 490/58ஆம் டி434/104ஆம்
2. கூடி "உசன்தறை" அளவைக்காரன் என்.தேவராசன் 1973.09.12ஆந் திகதி அளந்து விவரித்த 878ஆம் இலக்கப்படத்தில் சுட்டப்படும் 2ஆம் துண்டு நில. பர.3 குழி 9.72. ஆனால் அளவைக்காரன் சீ.இரத்தினசிங்கத்தின் கூடி 384ஆம் இலக்கப்படத்தில் சுட்டப்படும் 2ஆம் துண்டு. இப்படத்தின்படி நில.பர.3 குழி 9.72 இந்தப்பரப்பு மூன்று குழி ஒன்பது தசம் ஏழு இரண்டுக்கும் எல்லை கிழக்கு புன்னாலை றோட், மானிப்பாய் றோட். வடக்கு கூடி 1ஆம் ஆதனம். மேற்கு தருமலிங்கம் சோமசுந்தரத்தின் ஆதனம். தெற்கு சோமு இராமலிங்கத்தின் உரிமைக்காரரினாதனம். இந்த எல்லைக் காணியடங்கலும் வீடும் வடக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் மற்றுமிதற்குட்பட்ட கட்டடங்களும் இதைச் சேர்ந்தவைகளும்.

வாங்கற்காரன் கொள்விலையின் நாலிலொரு பங்கை உடன் அவ்விடத்திலேயே செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும்.

1. அரச இறை (பவுண்டேஜ்) ஒவ்வொரு ரூபா.5/-க்கும் 10சதவீதமாகவும்
2. பிஸ்கால் செலவு சிவில் நடைமுறைக்கோவையின் பிரகாரம்.
3. விளம்பரச்செலவுகளும், பிரசித்தசெலவுகளும்.
4. விற்பனவு சம்பந்தமான போக்குவரத்துச் செலவுகள்.
5. விற்பனவு கமிஷன் அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும்.
6. விற்பனவு ஒப்பந்தக்கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின் படி).

2001ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16ஆம் திகதி.

*நீதிமன்றக்கட்டளைப்படி*
து.சிறீமோகன் J.P
பதிவாளர் / பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

(91278)

### இளைஞர் சேவை அதிகாரி பதவிக்கான

# நேர்முகப் பரீட்சை முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஓக.21

இளைஞர் சேவை அதிகாரி தரம் I க்கு ஆள் சேர்ப்பதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கடந்த ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை முடிவுகள் இதுவரை வெளியிடப்படவில்லை.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 119 பட்டதாரிகள் தோற்றியிருந்தனர்.

நேர்முகப் பரீட்சை நடைபெற்று நான்கு மாதங்கள் கடந்த நிலையிலும் முடிவுகள் வெளியிடப்படாமை பரீட்சார்த்திகள் மத்தியில் அதிருப்தி நிலையைத் தோற்றுவித்துள்ளது.

மேற்படி நேர்முகப் பரீட்சை முடிவுகள் குறித்து இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.அலுவலகத்துடன் தொடர்பு கொண்ட போதிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய பதில் வழங்கத் தவறிவிட்டனர் என பரீட்சார்த்திகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பரீட்சை முடிவுகள் குறித்து அண்மையில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற நடமாடும் சேவையின்போது முறைப்பாடு செய்தும் பலன் ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

### தகராறை அடுத்து மோதல்:

# கண்டியில் 4 தமிழ்க் குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றம்

கொழும்பு,ஓக.21

கண்டி மாவட்டத்தில் வத்தேகம பொலீஸ் பிரிவுக்குட்பட்ட பெல்கொல்ல கிராமத்தில் தமிழ்க் குடும்பம் ஒன்றின் வீடு தீ வைத்து எரிக்கப்பட்டதையடுத்து இக்கிராமத்தில் வாழ்ந்து வந்த 4 தமிழ்க் குடும்பங்களும் மாத்தளை மாவட்டத்திலுள்ள உனுகல தோட்டத்தில் தஞ்சமடைந்துள்ளன.

பெல்கொல்ல கிராமத்திலுள்ள தமிழ்க் குடும்பங்களுக்கும் சிங்களக் குடும்பங்களுக்குமிடையே பாதை ஒன்றைப் பயன்படுத்துவது தொடர்பாக நீண்ட காலமாகத் தகராறு இருந்து வந்துள்ளது.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இவ்விவகாரம் தொடர்பாக இராமன் என்பவரின் மனைவிக்கும் அஜித்குமார என்பவரின் மனைவிக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இராமனும், அஜித்குமாரவும் கண்டி பேராதனைப் பல்கலைகழகத்தில் தொழிலாளர்களாகப் பணிபுரிபவர்களாவர். இவர்கள் இருவரும் வேலைக்குச் சென்ற பின்னரே இருவரின் மனைவிமாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இரு ஆண்களும் வீடு திரும்பிய பின்னர் இச்சம்பவம் அவர்களுக்கு விவரிக்கப்பட்டதை அடுத்து இராமனுக்கும் அஜித்குமாரவுக்கும் இடையே கடும் வாக்குவாதமும் அதனைத் தொடர்ந்து மோதலும் இடம்பெற்றுள்ளது. இவ்வேளை, அஜித்குமார கத்தியால் குத்தப்பட்ட நிலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் மரணமானார். இதனை அடுத்து வத்தேகம பொலீஸார் இராமனைக் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் அன்றைய தினம் இரவு இராமனின் வீடு பெரும்பான்மையினத்தவர்கள் சிலரால் தீ வைத்து கொளுத்தப்பட்டுள்ளது.

இதனால் கிராமத்தில் தொடர்ந்தும் இருக்க அச்சமடைந்த நிலையில் இராமனின் குடும்பம் உட்பட 4 தமிழ்க் குடும்பங்களும் மாத்தளை மாவட்டத்தின் உனுகல தோட்டத்தில் உள்ள தமது உறவினர்களின் வீட்டில் தஞ்சமடைந்துள்ளன. (ஐ)

### கப்பல் பயணிகளுக்கு அறிவுறுத்து

கொழும்பில் இருவழிப் பயணச் சீட்டுப்பெற்ற 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் மூலம் யாழ். வரும் பயணிகள் இங்கிருந்து மீண்டும் பயணம் செய்வதற்குப் பதிவினை மேற்கொள்ளும் நடைமுறை குறித்து 'றாள்' அலுவலகம் அறிவித்துள்ளது.

இருவழிப் பயணச் சீட்டுப்பெற்று வருவோர் இங்கிருந்து கப்பலில் பயணம் செய்யும் தினத்துக்கு முன்னர் வருகின்ற சனிக்கிழமைகளில் 'றாள்' அலுவலகத்தில் பதிவினை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இத் தினத்தைவிட ஏனைய நாள்களில் 'றாள்' அலுவலகத்துக்கு வந்து வீண் சிரமங்களை ஏற்படுத்த வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. (ஐ)

### ஆலயத்துக்கு தண்ணீர் பவுஸர்

வலி.வடக்கு,ஓக.21

தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில் ஆலயப் பாவனைக்கென தண்ணீர் பவுஸர் ஒன்றை தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் வழங்கி உள்ளது.

சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்ட இந்த பவுஸர் ஆலயச் சுற்றுப்புறத்தில் நீர் தெளித்தல் உட்பட மற்றும் தேவைகளுக்கும் பயன்படக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

(ஐ-86)

# யாழ்.பல்கலை அனுமதி: கூட்டுவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு மேலதிக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார் என்று கடந்த சனியன்று ஈபிடிபி. கட்சி விடுத்துள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1150 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் வசதிகளைக்கொண்டு இருக்கிறது. ஆனால் இம்முறை புள்ளி அடிப்படையிலும் மற்றும் மாவட்ட அடிப்படையிலும் 611 மாணவர்களே சேர்த்துக் கொள்ளப்படத் தகுதிபெற்றிருந்தனர். இதனால் 539 மாணவர்களுக்கான வெற்றிடங்கள் தோன்றின. இது பல்கலைக்கழகத்துக்கான நிதி ஒதுக்கீடு உட்பட பல விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தவிடயத்தில் தலையிட்ட அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கல்வி, உயர்கல்வி அமைச்சர்களுடனும், ஜனாதிபதியுடனும் நடத்திய பேச்சுகளையடுத்து கலைத்துறைககு 219 மாணவர்கள் உடனடியாகச் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். மேலும் விவசாய விஞ்ஞானத் துறைக்கு 7 மாணவர்களும், உயிரியல் விஞ்ஞானத்துறைக்கு 53 மாணவர்களும், பௌதீக விஞ்ஞானத் துறைக்கு 84 மாணவர்களும், முகாமைத்துவத்துறைக்கு 60 மாணவர்களும், வர்த்தகத்துறைக்கு 86 மாணவர்களுமாக மொத்தம் 290 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

- இப்படி ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# தொழில் முயற்சியாளருக்கு நிதி உதவ இங்கு நிறுவனங்கள் எதுவுமில்லை

ஆண்டாண்டு காலமாக விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டமைந்த யாழ்ப்பாண பொருளாதாரக் கட்டமைப்பானது, தற்போது கைத்தொழில் சார்ந்ததாக உலக பொருளாதார முறைமையை ஒட்டி மாற்றம் கண்டுவருகிறது.

'சாண் ஏற முழம் சறுக்கும்' நிலையாக சுயதொழில் முயற்சியாளர்களுக்கு நிகழ்கால யுத்த நிகழ்வுகளும் இடப்பெயர்வுகளும் அமைந்துவருகின்றன. இதனால் பெருமளவான சுயதொழில் முயற்சியாளர்களால் தொடக்க கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்திற்குச் செல்ல முடியாது பல பின்னடைவுகளைச் சந்திக்கிறார்கள்.

ஒரு சுயதொழில் முயற்சியாளன் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளாவன: -

1. நிதி 2. காணி 3. கட்டடம் 4. தொழில் நுட்பம் 5. தொழில் முயற்சியாண்மை (ஒரு தொழிலை செய்யக்கூடிய ஆற்றல்) 6. சந்தை வாய்ப்பு.

யாழ்ப்பாணத்து மக்கள் இயற்கையாகவே கடின உழைப்பாளிகள். எனவே அவர்களிடம் தொழில் முனைப்பு போதிய அளவு உண்டு. பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ளமையால் காணி, கட்டட வசதிகள் போதிய அளவு பெறக்கூடியதாகவே இருக்கிறது.

தொழில் நுட்பத்தைக் கொடுக்க இன்று பல நிறுவனங்களும் போட்டி போட்டு முன்வருகின்றன. அதாவது தொழில்நுட்பத்தை இலவசமாகவோ பணத்திற்கோ பெறக்கூடியதாக இருக்கிறது.

சந்தைவாய்ப்பைப் பொறுத்தளவில், உற்பத்தி செய்யப்படும் இடத்தில் கேள்விக்கும் மேலதிகமாக உற்பத்தி அமைவதால் போதிய அளவு சந்தைவாய்ப்புக் கிடைப்பதில்லை. எனவே சந்தைக்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்கும், உற்பத்தியின் தரத்தை நிர்ணயிக்கவும், உறுதிப்படுத்தவும் நாடளாவிய ரீதியில் சந்தைக்கான வாய்ப்பை அறிந்து சொல்லவும் ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு வேண்டும். இத்தகைய நோக்கங்களை அடைவதற்கு 'யாழ்ப்பாண தொழிற்துறை மேம்பாட்டு பணியகம்' (Yalpanam Enterprises Promotion Center - YEPC) ஊடாக முயற்சிக்கப்படுகிறது.

ஒவ்வொரு சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளனும் எதிர்நோக்கும் மிக முக்கியமான பாரதூரமான பிரச்சினை நிதிப் பிரச்சினை. யாழ். மாவட்டத்தைப் பொறுத்தளவில் தொழிற்துறை நடவடிக்கைக்காக நிதியுதவி செய்யக்கூடிய நிதி நிறுவனம் ஒன்றில்லை என்பதைச் சொல்லலாம். ஒரு சுயதொழில் முயற்சியாளனுடைய சிந்தனையை அல்லது திட்டத்தைப் புரிந்துகொண்டு, செயல் வடிவம் கொடுப்பதற்காக நிதி வழங்குவதற்கு இன்று இங்குள்ள அரச, தனியார் வங்கிகளும் முன்வருவதில்லை. எனவே காலத்தின், இத்தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய, தொழில முயற்சியாளர்களின் திட்டங்களைப் பரிசீலனை செய்து தகுதியானதை சிபாரிசு செய்ய YEPC முன்வந்தாலும், அதை ஏற்று நிதி வழங்கக்கூடிய ஒரு நிதி நிறுவனம் இல்லை.

இத்தகைய ஒரு நிறுவனத்தை, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரச அரசசார்பற்ற நிறுவனங்களூடாக நிறுவுவதற்கு தொழிற்றுறை திணைக்களம் சாத்தியமான அனைத்து வழிகளிலும் முயற்சி செய்துவருகின்ற போதிலும், இதற்கான மாற்று ஏற்பாடு செய்யப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். ☆

*- ப.ராகவன் -*
*மாவட்ட அலுவலர்/முகாமைத்துவ உதவியாளர்,*
*தொழிற்றுறைத் திணைக்களம்,*
*யாழ்.செயலகம்.*

## வாசகர் திருமுகம்

### துணை மருத்துவ சேவை; பரீட்சை முடிவு எப்போது வரும்?

கடந்த ஆண்டு ஜூன் மாதம் துணைமருத்துவ சேவை மற்றும் அதனோடு இணைந்த தொழில்நுட்ப சேவைகளுக்கான பரீட்சை நடைபெற்றது. எனினும் பதினான்கு (14) மாதங்களாகியும் இதுவரை பரீட்சை முடிவு வெளிவரவில்லை.

இப்பரீட்சைக்குக் கடந்த ஆண்டு பங்குனி மாதம் வர்த்தமானி மூலம விண்ணப்பம் கோரப்பட்டு நாடுபூராவும் அதே ஆண்டு ஜூன் மாதம் பரீட்சை நடத்தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட மேற்படி பரீட்சைக்குச் சுமார் 700பேர்வரையில் தோற்றியிருந்தனர்.

மேலும், துணை மருத்துவ சேவைகளுக்கு யாழ். குடாநாட்டில் உள்ள பல்வேறு தர மருத்துவ மனைகளிலும் பலத்த தட்டுப்பாடு நிலவிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பரீட்சை முடிவுபற்றிய தெளிவை ஏற்படுத்தினால் எம்போன்ற பரீட்சார்த்திகளுக்கு உதவியாக இருப்பதுடன் இச்சேவைகளுக்கான தெரிவையும் விரைவுபடுத்தலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*கோப்பாய* N.குமரன்.

### பாரபட்சம் ஏன்?

சேவைகளில் மகத்தான சேவை வைத்திசேவை; பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் வைத்தியர்களும் தாதியர்களும் தம்மை நம்பி வரும் நோயாளிகளுக்குச் சேவை புரிகிறார்கள். வடக்கு (யாழ்ப்பானம் உள்ளிட்ட) வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதியர்கள், தாதியர் பற்றாக்குறை காரணமாகவும், தமது பொருளாதார நிலை காரணமாகவும் மேலதிகமாக வேலை செய்கிறார்கள்.

இவர்களுக்கான மேலதிகக் கொடுப்பனவுகள் பங்குனி மாதத்துக்குப் பிறகு வழங்கப்படவில்லை. ஆனால் தென்னிலங்கையில் பணிபுரியும் வைத்தியர், தாதியர்களுக்கான மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவிட்டன.

தெற்குக்கு ஒரு நீதி! வடக்குக்கு ஒரு நீதியா? இனியாவது சம்பந்தப்பட்டோர் பாரபட்சம் காட்டாது கவனம் எடுப்பார்களா?

*யாழ்ப்பாணம்* பாதிக்கப்பட்டோர் சார்பில், பி.கார்த்திகா.

### யாழ்.தமிழர்கள் முட்டாள்களா?

யாழ். பலாலி வானொலி சேவை முற்றிலும் தமிழர்களை முட்டாள்களாக நினைத்தே செயற்படுகிறது போலும். ஏனோ தெரியாது அது தினமும் குடாநாட்டுச் செய்தி என்று டக்ளஸ் புராணமே பாடுகிறது.

அவரின் செய்தியில் உண்மைக்குப் புறம்பானதே அதிகம் என்று கூறிவிடலாம். திவ்வியனின் கைது மற்றும் திவ்வியன் நீதிமன்றில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்படாத நிலையில் அவருக்குப் புலி முத்திரை குத்தி, கைதுக்கு நியாயம் கற்பிக்க முயற்சிக்கப்பட்டது.

அத்துடன் இராணுவத்தின் செய்தியும், அறிக்கையுமே யாழ்.சேவையில் ஒலிபரப்பாகும். அது முற்றிலுமே உண்மைக்குப் புறம்பானதாகவே இருக்கும். பாலியல் வல்லுறவு நடந்ததாகக் கூறப்பட்டு இரண்டு பொலீஸார் கைது செய்யப்பட்ட பின்னும், அதைப் புலிகள் செய்ததாகவே படையினர் அறிக்கைவிட்டனர்.

குடாநாட்டுச் செய்தி என்று யாழ். சேவையில் கைதுகள், காணாமற்போதல், சோதனைச்சாவடிக் கெடுபிடிகள், பாலியல் வல்லுறவுகள், கொலைகள், கிளைமோர் குண்டுவெடிப்புகள் போன்றவற்றையும் கூறலாம்தானே.

அத்துடன் பலாலி சேவை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் செய்தியை இரவு 9 மணிக்கு பெற்று ஒலிபரப்புவது வழமை. ஆனால் இராணுவத்துக்கு கொழும்பிலோ, வேறு இடத்திலோ இழப்பு அதிகம் என்றால் சமிக்ஞை கிடைக்கவில்லை என்று கூறி இசையை ஒலிபரப்புவார்கள். இது ஏன்?

யாழ். மக்கள் வேறு ஒரு செய்தியையும் கேட்கமாட்டார்கள் என்றும், முட்டாள்கள் என்றும் நினைக்கின்றனரா?

*யாழ்ப்பாணம்* து.கமலா

### கரவெட்டி நலன்புரி நிலையத்துக்கு 'பிளாஸ்ரிக்' கூரைத்தகடு கிடைக்குமா?

இன்று நாட்டின் ஒரு சாபக்கேடு மக்களின் இடப்பெயர்வு ஆகும். அது நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ இடம்பெறுகிறது. இப்படியான சூழ்நிலையில் இடம்பெயர்ந்த மக்களுக்கு கைகொடுத்தது நலன்புரி நிலையங்களே.

இதனை வடக்கு - கிழக்கில் பிறந்த எவரும் மறுக்க முடியாது. இந்த வகையில் கரவெட்டி கிழக்கில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் அமைத்துக் கொடுத்தன. இந்த நிலையங்களில் கூரைக்குப் பதிலாக 'பிளாஸ்ரிக்' சீற்றுகளே வழங்கப்பட்டன. அவையும் தற்போது பழுதடைந்து விட்டன.

இனிவரும் மாதங்கள் மழைகாலம் ஆகையால் இந்த நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் இடம்பெயர்ந்த மக்கள் மழை வெள்ளத்தில் மூழ்குவதைத் தடுக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் 'பிளாஸ்ரிக்' கூரைகளைத் தந்துதவுமா? இன்று பெரும் சேவைகளைச் செய்துவரும் கட்சிகளின் உதவிக் கரத்தை நாடுகின்றோம்.

*கரவெட்டி கிழக்கு* ந.சேயோன்

### ஜனாதிபதியிடம் கடிதங்களை வழங்கிய

# 27 பிரதி அமைச்சர்களும் பதவி இழந்துவிட்டனராம்!

### ஐ.தே.கட்சி கூறுகிறது

கொழும்பு,ஓக.21

ஜனாதிபதியிடம் ராஜினாமாக் கடிதம் சமர்ப்பித்த பிரதி அமைச்சர்கள் பதவி இழந்தவர்களாகவே கருதப்படுவர். அவர்கள் பிரதி அமைச்சர்களுக்கான சலுகைகளை அனுபவிக்க முடியாது. சட்டவிரோதமான முறையில் அவர்கள் அந்தச் சலுகைகளை அனுபவித்தால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும்.

இப்படி எச்சரிக்கை விடுத்துள்ளது ஐ.தே.கட்சி.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரோன் பெர்னாண்டோவும், சட்ட ஆலோசகர் திலக்மாரப்பனவும் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியிடம் ராஜினாமாக் கடிதத்தைக் கையளித்தால் அவர்கள பதவி இழந்தவர்களாகவே. கருதப்படுவர். அவர்கள் இனிமேல் பிரதி அமைச்சர்கள் அல்லர். சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர்களே.

பதவி இழந்துள்ள அவர்கள் பிரதி அமைச்சருக்கு உரிய வாகனம், சம்பளம் ஆகியவற்றைப் பெற அருகதையற்றவர்கள். நாடாளுமன்றத்தில் கூட அவர்கள் பின்வரிசையில்தான் அமர வேண்டும்.

தொடர்ந்தும் பிரதி அமைச்சர்களுக்குரிய சலுகைகளை அவர்கள் அனுபவித்தால், அவர்களின் அமைச்சுக் கணக்காளர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்வோம் - என்று தெரிவித்தனர். (ஐ-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

S.சத்தியசீலன் என்பவரது டயரி, டைபிள் மற்றும் சில முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை 20.08.2001 அன்று யாழ்ப்பாணத்துக்கும் ஐந்து சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் றெனி மூக்குக் கண்ணாடி அகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (91373)

975/19, வளன்புரம், கொழும்புத் துறையைச் சேர்ந்த றெஜினா மேரி ஜோசப் என்பவருடைய அடையாள அட்டைகள் உட்பட முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்பு பாக் (Bag) கோயில் வீதி, சஞ்சுவாம் கோயில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அருள் ஆச்சிரமத்தில் அல்லது அபிரான்சிஸ், 32, கோயில் வீதி, அஜய் ரியூட்டறியில் ஒப்படைத்துதவவும். (91370)

சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த மரியாம்பிள்ளை டொன்பொஸ்கோ என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0905004940) மாவிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயா பேக்கரி, சங்கானை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (91387)

## புறொயிலர் குஞ்சுகள்

BHIRAHA FARM புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். அல்லது சுபகணநாதன், பண்ணை வீதி, மாலு சந்தி, அல்வாய்.(91349)

## விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்குரிய குளிர் சாதனப்பெட்டி (இருகதவுகளுள்ளது) விற்பனைக்குண்டு. விலை 7,000/- தொடர்பு: S.றஞ்சித் 54,3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (91378)

## திருமண சேவை

வெளிநாட்டு, உள்நாட்டு மணமக்கள் எம்மிடம் உண்டு. ஏற்கனவே தொடர்பு உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (91379)

## DISSERTATION TYPE SETTING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் ஆங்கிலக் கட்டுரைகள், தட்டச்சு வேலைகள் செய்து, Binding செய்து கொடுக்கப்படும். பிள்ளையார், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர். (91376)

## தேவை

*புடைவை வியாபாரத்துக்கு விற்பனையாளராகக் கடமையுரிய இரண்டு பெண்பிள்ளைகள் தேவை. உடனே நேரில் வரவும். புடைவை விற்பனையில் அனுபவம் மிக்கவர்களும், யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது.*

**த.சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும், 21, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.** (91381)

## படிவம்

ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெறாத ஆசிரியர்கள் தொடர்பான விவரப்பத்திரம் - 2001 விற்பனையாகின்றது. முடிவு திகதி: 2001-09-10. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/17872)

## போலியோ மருந்து வழங்கப்படவில்லை

வடமராட்சி, ஓக.21

கரவெட்டி சின்னத்தம்பி ஞாபகார்த்த கிராமிய அரசினர் வைத்தியசாலைக்கு போலியோ மருந்து பல காலமாக வழங்கப்படவில்லை. இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் 5 வயதுக்குட்பட்ட போலியோ மருந்து பெறவேண்டிய குழந்தைகள போலியோ மருந்தின்மையால் அவற்றைப் பெறமுடியாத நிலை காணப்படுகிறது. (ம-173)

## மாதாந்த உதவிப் பணம்

கோப்பாய், ஓக.21

கோப்பாய்ப் பிரதேச செயலாளர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப பணம் பெறுவோர் இம்மாதத்திற்குரிய உதவித் தொகையை எதிர் வரும் 25ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஐ-72)

## வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு ஆயர் விஜயம்

வடமராட்சி கிழக்கு,ஓக.21

யாழ்.ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கடந்த வார இறுதியில் வடமராட்சி கிழக்குக்கு விஜயம செய்தார்.

கடந்த சனிக்கிழமை மணற்காட்டுக்குச் சென்ற ஆயரை மணற்காடு பங்குத்தந்தை அருட்திரு.அன்ரன் ஜோர்ஜ் தலைமையில் மக்கள் வரவேற்றனர். பின்னர் மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் மாலை நற்கருணை ஆராதனையை ஆயர் நடத்தினார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்தல் பூசையினை நடத்திவிட்டு குடத்தனை பொற்பதி புனித சம்பேதுரவர் ஆலயத்திற்குச் சென்று திருப்பலிப்பூசை ஒப்புக் கொடுத்தார்.

வடமராட்சி கிழக்கு விஜயத்தின் போது அங்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் ஆயர் கேட்டறிந்தார். (ஐ-182)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வல்வெட்டித்துறை
தபால் அலுவலகத்தில்
தபால் விநியோகத்தராகக்
கடமையாற்றி, தற்போது தபால் அதிபர்
தரம் - 2 இற்கு
பதவியுயர்வு பெற்றுள்ள

**திரு.பூபாலசிங்கம் அகமணிதேவர்**

அவர்களை மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கு.இரத்தினசிங்கம் குடும்பத்தினரும்,
சி.இந்திரதாஸ் குடும்பத்தினரும்.

*அபிராமி ஸ்ரோர்ஸ்,*
*வல்வெட்டித்துறை.* (91372)

## பாராட்டி நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

**திருநெல்வேலி ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் தேவஸ்தானம்**

எமது ஆலய புனரமைப்புத் திருப்பணிக்கு ஒரு லட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்து அதில் 75,,000/- ரூபாவை உடன் வழங்கி எமக்கு உதவியமைக்காக,



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர்
**உயர்திரு.கா.வே.குகேந்திரன்**
**(ஜெகன்)**
அவர்களுக்கும்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளரும்
நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவருமான
**உயர்திரு.க.மணிபல்லவராஜன்**
**(நிஷாந்தன்)**
அவர்களுக்கும்

எங்கள் ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் தேவஸ்தானம் சார்பில் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துக்கள் கூறி, ஸ்ரீ ஞானவைரவப் பெருமானின் நல்லருள் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

*பாற்பண்ணை வீதி,* - ஸ்ரீ ஞானவைரவப் பெருமான்
*திருநெல்வேலி.* (91383) தேவஸ்தானம்.

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**பத்தமேனி விநாயக சனசமூக நிலைய**
**புதிய கட்டடத்துக்கு நிதி உதவி வழங்கிய**



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர்
**திரு.கா.வே.குகேந்திரன்**
**(ஜெகன்)**
அவர்களுக்கும்



வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர்
**திரு.பூ.குணசிங்கம் (J.P.U.M.)**
அவர்களுக்கும்



அச்சுவேலிப் பிரதேச அமைப்பாளரும்
வலி.கிழக்குப் பிரதேச சபை
உபதலைவருமான
**திரு.யூ.எல்.ஏ.ரவி**
அவர்களுக்கும்

எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்தும்
பாராட்டி வாழ்த்துகிறோம்.

- பத்தமேனி விநாயக சனசமூக நிலையத்தினர்

*பத்தமேனி,*
*அச்சுவேலி.* (91388)

## துயர் பகிர்கின்றோம்

பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் திரு.சி.சச்சிதானந்தம் அவர்களின் பாசமிகு மாமனார்

**கந்தையா அருளம்பலம்**

அவர்கள் 16-08-2001ஆம் திகதியன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*தலைவர்,*
*பணிப்பாளர்கள், பணியாளர்கள்,*
*பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்,*
*பளை.*

(C/17938)

## நெஞ்சமகலா நினைவுகளோடு

ஐந்தாம் ஆண்டு | ஒன்பதாம் மாதம்



**செல்வி செல்வரத்தினம் ரஜனி**

(யாழ். இந்து மகளிர் கல்லூரி
மாணவி A/L 1995 வர்த்தகப்பிரிவு)

மலர்வு 19-10-1976
உதிர்வு 21-08-1996



**அமரர் இராசு செல்வரத்தினம்**

(அம்பாள் மரக்காலை உரிமையாளர்)

தோற்றம் 03-08-1942
மறைவு 30-11-2000

தலைமகளுக்குத் தலைமகளாய் வந்த கலை மகளே!
நீ சீரும் சிறப்புடன் வாழ்ந்த பூங்காவில் மலர்ந்த மாமகளே!
உன்னை வாழ்விலிழந்ததாலும் உன்மீது கொண்ட பாசத்தாலும்
தினமும் உன்னையே நினைந்துருகி வாடி செய்வதறியாது
தன்னையே உருக்கி உன்நினைவோடு உன்னோடு வந்துவிட்ட
தந்தையையும் இழந்து ஒன்பது திங்களாகிறது! உன்னை நினைவு
கூரும் ஐந்தாம் ஆண்டில் தந்தையையுமிழந்து தவிக்கின்றோம் நாம்!
உங்கள் நினைவுகளோடு வாழும் எங்களை என்றும் நீங்கள் வழிநடத்துவீர்களே!

உங்கள் ஆத்மா சாந்திபெற அம்பாளின் அருளை வேண்டுகின்றோம்.

*இல.50, 5ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர்.* (91357)

- குடும்பத்தினர்.

# வீட்டில் உறங்கிய இளைஞர் நள்ளிரவில் கைது!

புத்தூர் வாதரவத்தையில் உள்ள தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த திருநாவுக்கரசு நீதிராசா (வயது 20) என்ற இளைஞரை நள்ளிரவு ஒரு மணியளவில் வந்த படையினர் தட்டி எழுப்பிக் கைது செய்து கொண்டு சென்றுள்ளதாக, இளைஞரின் தாயாரான மங்களேஸ்வரி திருநாவுக்கரசு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளதாக அந்த ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி தெரிவித்தார். (ஒ-3)

## நன்றி கூறி வாழ்த்துகின்றோம்

*நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலய*
கட்டட புனரமைப்புக்கும்
*நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டு மைதான* புனரமைப்புக்கும்
நிதி ஒதுக்கீடு செய்து உதவியமைக்காக



மாண்புமிகு அமைச்சர்
**திரு. K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
**உயர்திரு.**
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்

**தோழர் கேதீஸ் (மனோ)**
அவர்களையும்

E.P.D.P. யாழ்.மாநகர சபை உறுப்பினர் **றீகன்** அவர்களையும்
E.P.D.P. யாழ்.மாநகர சபை உறுப்பினர் **M.ஜேசுதாசன் J.P.**
அவர்களையும்,
நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலய*
*பங்குத் தந்தையும் பங்கு மக்களும்*
*நாவாந்துறை சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையமும்*
*நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகமும்.*
(91401)

## பதவி வெற்றிடம்
## பாதுகாப்பு உத்தியோகத்தர்

பின்வரும் தகைமைகள் உடையோர் இன்று (21.08.2001) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.30 மணிக்கும் 4.30 மணிக்கும் இடையில் (புதிய நேரம்) நேரிலே சமுகமளிக்கவும்.

1. கல்வித்தகைமை :- கனிஷ்ட பொதுத் தராதரம்
2. வயது :- 35 இலிருந்து 55 வரை
3. சிறந்த ஒழுக்கம்

பாதுகாப்புச் சேவையில், காவலாளி வேலையில், முன் அனுபவமுள்ளோருக்கு வயதெல்லைக் கட்டுப்பாடு விலக்கப்படும்.

நல்லூர் வணிகர் கழகம்,
ஆடியபாதம் வீதி,
(கல்வியங்காடு சந்திக்கு சமீபமாக)
திருநெல்வேலி கிழக்கு.
(91400)

## அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55 (1)

மல்லாக மாவட்ட நீதிமன்றத்தில்

ஆறுமுகம் பாலசிங்கம் பெண் லீலாவதி,
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.
வழக்காளி

வழ.இல. விவாகரத்து/132 எதிராக

ஆறுமுகம் பாலசிங்கம்,
ஸ்ரேசன் வீதி, மல்லாகம்.
எதிராளி.

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு,

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி, எதிராளி வழக்காளியை வன்மமாக விட்டுப்பிரிந்து வாழ்வதால் எதிராளி வன்ம உறவறுப்புக் குற்றம் புரிந்துள்ளார் என்ற அடிப்படையில் வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் உள்ள திருமணத்தை புறம் வைக்க கட்டளைக்கும் தீர்ப்புக்கும் இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2001 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 04 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்துவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்ட முறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைந்தது நீதிமன்றக்கட்டளைப்படி
இ.வசந்தசேனன் செ.விக்னேஸ்வரமூர்த்தி
வழக்காளியின் சட்டத்தரணி பதிவாளர்/ப.பிஸ்கால்/சமாதான நீதிவான்,
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

*குறிப்பு:* விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க - நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுகதுதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்கும் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 - ம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

செ.விக்னேஸ்வரமூர்த்தி
கையொப்பம், பதிவாளர்.

2001 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆம் நாளாகிய இன்று

செ.விக்னேஸ்வரமூர்த்தி
பதிவாளர்/ப.பிஸ்கால்/சமாதான நீதிவான்,
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.
(C/17942)

# மணலாறில் மோதல்

மணலாறு, ஆண்டான்குளம் பகுதியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நடந்த மோதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த மோதலையடுத்து அப்பகுதியிலிருந்து விடுதலைப் புலி ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாகவும் - புலிகள் தரப்பில் கடுமையான சேதம் ஏற்பட்டிருக்கும் எனத் தாங்கள் நம்புவதாகவும் ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (உ-ஒ)

# சம்பள ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கும்

கொழும்பு,ஓக.21

அரச ஊழியர்களின் சம்பள உயர்வு குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சம்பள ஆணைக்குழு தனது அறிக்கையை அடுத்த மாதம் 31 ஆம் திகதி சமர்ப்பிக்க விருக்கின்றது.

இந்த அறிக்கையைத் தயாரிக்கும் பணியை ஆணைக்குழு ஆரம்பித்துள்ளதாக அதன் செயலாளர் ஜீ.பி அபயகீர்த்தி தெரிவித்தார்.

ஆயிரத்து 539 யோசனைகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்தன என்றும் -

அந்த யோசனைகள் விரிவாக ஆராயப்பட்டு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் - அவர் தெரிவித்தார். (உ-3)

# சிறை ஊழியருக்கு பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்.நீதிவான் நீதிமன்ற சிறைக் கூடத்துக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவருக்கு சாராயம் வழங்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மூவரையும் ஆள் பிணையில் செல்ல யாழ். மேலதிக நீதிவான் திருமதி எஸ்.இளங்கோவன் அனுமதித்தார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிமன்ற பொலீஸ் சார்ஜன்ட், நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். அதைத் தொடர்ந்து குறிப்பிட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் வாக்கு மூலங்களை நீதிவான் பதிவு செய்தார்.

மீண்டும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜரான பிரஸ்தாப சிறைச்சாலை உத்தியோகத்தர்களை ஆள் பிணையில் செல்ல அனுமதித்த மேலதிக நீதிவான் திருமதி ச. இளங்கோவன், வழக்கை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (உ-3-6)

## விற்பனையாகின்றன

1) O/L ENGLISH LITERATURE Past paper - 125/=
2) ENGLISH S.A - 30/=
3) GRAMMER IN ACTION - 55/=
4) A/L ENGLISH- 150/=
5) O/L ENGLISH model paper - 8/=
6) இந்து நாகரிகம் பகுதி -II வினாவிடை - 80/=
7) O/L வணிகக்கல்வி - 50/=
8) அரசியல் மூலதத்துவங்கள் A/L கடந்த கால வினாவிடை -247-50
9) சுற்றாடல் தரம் -3-80/=

மக்மிலன் புத்தகசாலை
இல.3, பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.
(C/17941)

## நாகம்ஸ் சுன்னாகம்

வேணு, ரோஜா (இரட்டை வேடம்) நடிக்க
**பொட்டு அம்மன்**
(ரீல்ஸ்)
பேய்களின் அட்டகாசம் நிறைந்த படம்
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(91399)

## ராஜா யாழ்ப்பாணம்

இளைய தளபதி விஜய்,
தேவயானி, சூர்யா,
நடிப்பில
**ப்ரண்ட்ஸ்**
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
நாளை முதல்
*முதலமைச்சர் ஜெயந்தி*
(C/17875)

## வாழ்த்துகின்றோம்

நாளை அகவை அறுபது எய்தும்
எமது குடும்ப நண்பர்
**திரு.வே.நாகராசா**
(பிரதி அதிபர், மீசாலை வீரசிங்கம் ம.வி.)

அவர்கள் நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையையிட்டு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இ. சந்திரமௌலீசன்
*சரசாலை.* (91398) குடும்பத்தினர்.



உ
## வடலியடைப்பு புதறானை
## திருவருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்
## நூதனவசந்த மண்டப பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் விஷு வருசம் ஆவணித் திங்கள் 6 ஆம் நாள் (22-08-2001) புதன்கிழமை, சதுர்த்தித்திதியில், அத்தம் நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய நன்னாளில் காலை 7.45 மணி முதல் 8.30 மணி வரை உள்ள சுப முகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியிருப்பதனால் அத்தருணம் அடியார்கள் யாவரும் வந்து கிரியைகளில் பங்குபற்றி விநாயகப்பெருமானின் அருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம.

*வசந்தமண்டப சிற்பாசிரியர்:* சு. விக்கினேஸ்வரன், அராலி.

*வடலியடைப்பு* (C/17943) - பூங்காவனஅமைப்புக்குழு.

## துடுப்பாட்டம்

### யாழ்.பிராந்திய மக்கள் வங்கியும்
### யாழ்.பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக்கழகமும்

இணைந்து மக்கள் வங்கியின் 40 ஆவது வருட நிறைவினைக் கொண்டாடும் முகமாக 6 பேர் 6 ஓவர்கள் கொண்ட மென்பந்து துடுப்பாட்டப் போட்டியொன்றினை விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தவுள்ளது.

நுழைவுக்கட்டணம் : ரூபா 100/=
விண்ணப்ப முடிவு திகதி : 28.08.2001
அணி ஒழுங்குத் தெரிவு : 29.08.2001 பி.ப. 4.00 மணிக்கு திருநெல்வேலி Y.M.H.A. இல்.
மைதானம் : திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மைதானம்.

*விண்ணப்ப படிவங்களை திருநெல்வேலி* Y.M.H.A. *இல் பெற்றுக்கொள்ளலாம்.*

செயலாளர்,
யாழ்.பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக்கழகம். (C/17945)

## பிற்போடப்பட்டுள்ளது

### யாழ்.பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக்கழகம்
### மக்கள் வங்கியின் 40 ஆவது வருட நிறைவு விழா
### மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி - 2001

மக்கள் வங்கியின் 40 ஆவது வருட நிறைவினை கொண்டாடு முகமாக எம்மால் நடத்தப்படும் சைக்கிளோட்டப் போட்டியின் விண்ணப்ப முடிவு திகதி அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 28.08.2001 (செவ்வாய்க்கிழமை) வரை பிற்போடப்பட்டுள்ளதுடன் இந்தச் சைக்கிளோட்டப் போட்டி பின்வரும் திகதிகளில் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

பெண்களுக்கான போட்டி : 02.09.2001 காலை 6.30 மணி (இலங்கை நேரம்) சுன்னாகம் சந்தி ---> காங்கேசன் துறை வீதி ஊடாக துரையப்பா விளையாட்டு அரங்கு வரை.

ஆண்களுக்கான போட்டி : 08.09.2001 காலை 7.30 மணி (இலங்கை நேரம்) சட்டநாதர் கோயில் முன் ---> பருத்தித்துறை வீதி ஊடாக மாலிசந்தி ---> உடுப்பிட்டி ---> அச்சுவேலி ---> சுன்னாகம் ---> காங்கேசன்துறை வீதி ஊடாக துரையப்பா விளையாட்டு அரங்கு வரை.

*குறிப்பு:* விண்ணப்ப முடிவு திகதிக்குப்பின் விண்ணப்பப்படிவங்கள் எக் காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

செயலாளர்,
யாழ்.பிராந்திய மக்கள் வங்கி,
விளையாட்டுக் கழகம். (C/17944)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை செல்வராசா (கண்டுமணி)

சரசாலை தெற்கு, கமலாசனி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை செல்வராசா (கண்டுமணி) நேற்று (20.08.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 20.08.2001 மாலை கரவெட்டியில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி:
*கரவெட்டி கிழக்கு,*
*உபதபாலகம் முன்பாக,*
*கவுந்தில், கரவெட்டி.* (91404)

தகவல்:
வே.கணேசன்
(சகோதரன்)

## நூல் விற்பனைக்கு

**ஆகமச் சித்திரங்கள் - பாகம் 2** (வைஷ்ணவ நிதி)

*24.05.2001 இல் கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் வெளியிடப்பெற்ற சிவாகம ஆய்வாளர் பிரம்மஸ்ரீ சாம்பசிவ. சோமாஸ்கந்த சிவாச்சாரியாரின் "ஆகமச் சித்திரங்கள் - பாகம் 2" நூல் விற்பனையாகின்றது. பிரதி ஒன்றின் விலை ரூபா 200.00.*

*கிடைக்கும் இடம்:* பிரம்மஸ்ரீ சிவ.நித்தியானந்தக் குருக்கள்
முருகமூர்த்தி வீதி,
சங்கானை.



## ஒத்திவைக்கப்பட்டுள்ளது

அளவெட்டி கிழக்கு வெள்ளியம்பதி ஸ்ரீ காளி அம்பாள் ஆலய கட்டட நிதிக்காக இன்று (21.08.2001) செவ்வாயன்று நடைபெற இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு சில தவிர்க்க முடியாத காரணங்களினால் 14.11.2001ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்

ஸ்ரீ காளி அம்பாள் ஆலய பரிபாலன சபை,
*அளவெட்டி.* (91395)



## உளங்கனிந்த நன்றியோடு
# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கிழவிதோட்டம் பிள்ளையார் கோயில்,**
**கிழவிதோட்டம் சனசமூக நிலையம், கரவெட்டி**

எமது ஆலயத்தின் புனரமைப்புத் திருப்பணிக்குப் பெருந் தொகை நிதியினையும் சனசமூக நிலையத்தின் கட்டட நிர்மாணப் பணிக்கு ஒரு தொகையினையும் ஒதுக்கி உதவியமைக்காக



மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்

கரவெட்டி பிரதேச சபை உபதலைவரான
**உயர்திரு.சி.அலெண்ரன் கியூட் (உதயன்)**
அவர்களுக்கும்

கரவெட்டிப் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர்களாகிய
**திரு.ப.ரவிந்திரன் (ராசிக்)** அவர்களுக்கும்
**திரு.A.ஜெயசீலன் (ஜெயம்)** அவர்களுக்கும்

எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்து
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கிழவிதோட்டம் பிள்ளையார் கோயில்
பரிபாலனசபை,
கிழவிதோட்டம் சனசமூக நிலைய
அங்கத்தவர்கள்.

*கிழவி தோட்டம்,*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.* (91390)



# கண்ணீர் அஞ்சலி

யாழ்.கிளைத் தலைவரும், தர்சன் பேக்கரி உரிமையாளரும் ஆகிய
திரு.ப.வி.யோசப் அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி கத்தரின் கனகமணி பயஸ்**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகம்,
யாழ்.மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்.

(C/17940)



# மரண அறிவித்தல்

## திருமதி தேவன் இரத்தினமணி

கொக்குவில் அச்சுக்கூட ஒழுங்கை (ஸ்டேஷன் றோட்) இராசரத்தினம் - இரத்தினம் தம்பதியினரின் இரண்டாவது மகளும் மண்டதீவைச் சேர்ந்த சின்னத்துரை தேவராசாவின் (இத்தாலி) அன்பு மனைவியுமான திருமதி இரத்தினதேவி இத்தாலியில் காலமாகிவிட்டார். இவர் சுரேஸ் (லண்டன்), சுபாஷினி, சுதர்சினி, சஜீவன் (இத்தாலி) ஆகியோரின் தாயாரும், ஜெயசுந்தரம் இராசதேவி (ஜேர்மனி), தவேந்திரன் சுசிலாதேவி (சுவிஸ்), மனோகர லிங்கம் ஞானகலா (ஜேர்மனி), ரூபன் பிரசாந்தி (சுவிஸ்), இராசகோபால், கோபாலரத்தினம் (கொக்குவில்) ஆகியோரின் உடன்பிறந்த சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இத்தாலியில் நாளை (22.08.2001) புதன்கிழமை நடைபெறும்.

உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் இத்தகவலை அறியத்தருகிறோம்.

*தகவல்:*
*சங்கரலிங்கம் சாமியார் வீதி,* திருமதி இரத்தினம் இராசரத்தினம் (தாயார்)
*சிவகுருலேன் றோட்டு,*
*கொக்குவில்.* பெரியகோபால் / சின்னக்கோபால் } சகோதரர்கள்

(91389)


## சிறுவர் பாடசாலை மட்டத்திலான விளையாட்டுப் போட்டி

வலிகாமம்,ஓக.21

கந்தரோடை ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தினர் சர்வோதயத்தின் அனுசரணையுடன் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிறுவர் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி ஒன்றினை விரைவில் நடத்த உள்ளனர்.

இவ்விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் வலி. தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முன்பள்ளியினர் செப்ரெம்பர் மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை சுன்னாகம் இலங்கை வங்கியின் முன்பாக உள்ள செ.வைத்தீஸ்வரனிடம் ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

(ம-152)

## மாணவனை கடித்த குரங்கு

தென்மராட்சி,ஓக.21

ரியூசன் முடிந்து வீடு திரும்பிய சிறுவனை குரங்கு கடித்துக் காயப்படுத்தியது. அவர் கொண்டு சென்ற புத்தகத்தையும் கிழித்தெறிந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்றது.

குரங்குக் கடியினால் காயமடைந்த நெல்லியடியைச் சேர்ந்த இராஜேந்திரம் குருராஜ் (வயது 11) என்னும் மாணவன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

(ம-117)

## கருத்தரங்கு

தென்மராட்சி,ஓக.21

கிளிநொச்சி சாரணர் மாவட்ட தென்மராட்சி, பளை ஆகிய பிரதேசங்களிலிருந்து கடந்த 1999ஆம் ஆண்டு நுவரெலியாவில் நடைபெற்ற கலைக்கூறு பயிற்சி நான்கில் பங்குபற்றிய 40 சாரண ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கும் 12 மணிக்கும் திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளன.

கருத்தரங்கில் உயர்தருசின்னப் பயிற்சி-5க்குரிய தொழிற்பாடுகள், ஆணைப்பத்திரம் வழங்கல் ஆகியவை பற்றி கலந்துரையாடவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சாரணர் ஆணையாளரும் தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளருமான வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ம-117)

## இரவுவேளை தாக்கப்பட்டவர் படுகாயம்

தென்மராட்சி,ஓக.21

வல்வெட்டித்துறை பொலிகண்டிப் பகுதியில் ஒழுங்கை ஒன்றில் 'டோர்ச்' வெளிச்சத்துடன் நடந்து சென்ற நபர் ஒருவர் அங்கு மறைந்திருந்தவர்களால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த அல்பிரட் மேரி மெக்ஸன் (வயது 42) என்பவரே காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-117)

## சங்கக் கிளைகள் இயங்காததால் மக்கள் அவதி

கோப்பாய்,ஓக.21

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூன்று கிளைகள் இயங்காததால் நிவாரணப் பொருள்களைப் பெறுவதற்காக நீண்டதூரம் செல்லவேண்டி இருப்பதாகப் பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய் சந்தி, இருபாலை பழைய வீதி, இருபாலை கிழக்கு ஆகிய பகுதி மக்களே இவ்வாறு சிரமப்படுகின்றனர்.

இப்பகுதிகளில் அண்மையில் மக்கள் இடம்பெயர நேர்ந்தபோது அங்கு இயங்கிய கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூடப்பட்டன.

(ஐ-72)


# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**அல்வாய் வடக்கு அருள்மிகு அரசடி விநாயகர் ஆலயம்**

எமது ஆலயத்தின் புனர்நிர்மாண திருப்பணி வேலைகளுக்காக நிதி உதவி வழங்கிய



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்துசமய கலாசார அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய
மாண்புமிகு
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதம அமைப்பாளருமாகிய
**கௌரவ கே.வி.குகேந்திரன்**
(ஜெகன்)
அவர்களையும்



மேற்படி ஆலயத்தை புனரமைப்புச் செய்வதற்கான நிதியுதவியைப் பெறுவதற்காக சகல வழிகளிலும் ஆலோசனைகளும், ஒத்துழைப்பும் வழங்கிய பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர்
**உயர்திரு.ஸ்ரீரங்கேஸ்வரன்**
J.P.U.M.
அவர்களையும்

எல்லாம்வல்ல எமது அரசடி விநாயகர் திருவருட் கடாட்சம் கிடைக்கப்பெற்று, நீண்டகாலம் சகல சௌபாக்கியங்களுடனும் நலமுடனும் வாழவேண்டுமென நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்.

அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் ஆலய பரிபாலன சபை.

(91393)



# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**அளவெட்டி வடக்கு**
**பத்திரகாளிகா தேவி சமேத ஆதி வீரபத்திரர் ஆலய**

*புனர் நிர்மாணத் திருப்பணி வேலைகளுக்காக எமது கோரிக்கையை ஏற்று புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையூடாக மூன்று லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து அந்நிதியிலிருந்து ஒவ்றரை லட்சம் ரூபாவை இப்போது ஆலயத் திருப்பணி வேலையைக் கருத்திற்கொண்டு உடன் தந்துதவியமைக்காக -*



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு – கிழக்கு தமிழ்மொழி விவகாரங்கள் இந்து கலாசார மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய
**உயர்திரு.கே.வி.குகேந்திரன்**
(ஜெகன்)
அவர்களையும்



ஈ.பி.டி.பியின் காங்கேசன் துறைத் தொகுதி அமைப்பாளர்
**உயர்திரு.தி.சிவகுமார்**
(வேலு)
அவர்களையும்



வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் காங்கேசன்துறைத் தொகுதி உதவி அமைப்பாளருமான
**திரு.எஸ்.ஜெயராஜா**
(அப்பன்)
அவர்களையும்

நன்றியுடன் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆதி வீரபத்திரர் தேவஸ்தானம்,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. - தர்மபரிபாலன சபையினர்.

(91384)



கணனி வேலைவாய்ப்புடன் கல்விக்காக....

# CASIO COMPUTER SYSTEMS

மூன்று இடங்களில் ........ **50% FREE** (முதல் 10 பேர்)

| | | |
|---|---|---|
| 221, கச்சேரி நல்லூர் வீதி. | CASIO 3ஆம் கட்டை, கல்வியங்காடு | கலைவாணி கல்வி நிலையம் அருகில், கோப்பாய். |

புதிய வகுப்புகள்:
**Aug. 21, 27, Sept. 6, 9** ஆம் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

**A.L.RAGAVAN**
- DIRECTOR -

(91386)

# வீட்டில் உறங்கிய இளைஞர் நள்ளிரவில் கைது!

புத்தூர் வாதரவத்தையில் உள்ள தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த திருநாவுக்கரசு நீதிராசா (வயது 20) என்ற இளைஞரை நள்ளிரவு ஒரு மணியளவில் வந்த படையினர் தட்டி எழுப்பிக் கைது செய்து கொண்டு சென்றுள்ளதாக, இளைஞரின் தாயாரான மங்களேஸ்வரி திருநாவுக்கரசு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளதாக அந்த ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி தெரிவித்தார். (ஒ-3)


## நன்றி கூறி வாழ்த்துகின்றோம்

*நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலய*
கட்டட புனரமைப்புக்கும்
*நாவாந்துறை சென். நீக்கிலஸ்*
*விளையாட்டு மைதான* புனரமைப்புக்கும்
நிதி ஒதுக்கீடு செய்து உதவியமைக்காக



மாண்புமிகு அமைச்சர்
**திரு. K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

*யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்*
**உயர்திரு.**
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்



**தோழர் கேதீஸ் (மனோ)**
அவர்களையும்
E.P.D.P. யாழ்.மாநகர சபை உறுப்பினர் **றீகன்** அவர்களையும்
E.P.D.P. யாழ்.மாநகர சபை உறுப்பினர் **M.ஜேசுதாசன்** J.P.
அவர்களையும்,
நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலய*
*பங்குத் தந்தையும் பங்கு மக்களும்*
*நாவாந்துறை சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையமும்*
*நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகமும்.*
(91401)



## பதவி வெற்றிடம்
## பாதுகாப்பு உத்தியோகத்தர்

பின்வரும் தகைமைகள் உடையோர் இன்று (21.08.2001) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.30 மணிக்கும் 4.30 மணிக்கும் இடையில் (புதிய நேரம்) நேரிலே சமுகமளிக்கவும்.

1. கல்வித்தகைமை :- கனிஷ்ட பொதுத் தராதரம்
2. வயது :- 35 இலிருந்து 55 வரை
3. சிறந்த ஒழுக்கம்

பாதுகாப்புச் சேவையில், காவலாளி வேலையில், முன் அனுபவமுள்ளோருக்கு வயதெல்லைக் கட்டுப்பாடு விலக்கப்படும்.

நல்லூர் வணிகர் கழகம்,
ஆடியபாதம் வீதி,
(கல்வியங்காடு சந்திக்கு சமீபமாக)
திருநெல்வேலி கிழக்கு.
(91400)


## அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55 (1)

மல்லாக மாவட்ட நீதிமன்றத்தில்

ஆறுமுகம் பாலசிங்கம் பெண் லீலாவதி,
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.
வழக்காளி

வழ.இல. விவாகரத்து/132 எதிராக

ஆறுமுகம் பாலசிங்கம்,
ஸ்ரேசன் வீதி, மல்லாகம்.
எதிராளி.

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு,

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி, எதிராளி வழக்காளியை வன்மமாக விட்டுப்பிரிந்து வாழ்வதால் எதிராளி வன்ம உறவறுப்புக் குற்றம் புரிந்துள்ளார் என்ற அடிப்படையில் வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் உள்ள திருமணத்தை புறம் வைக்க கட்டளைக்கும் தீர்ப்புக்கும் இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2001 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 04 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவீர் தேவைப்படுத்துவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்ட முறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைந்தது. நீதிமன்றக்கட்டளைப்படி.
இ.வசந்தசேனான் செ.விக்னேஸ்வரமூர்த்தி
வழக்காளியின் சட்டத்தரணி பதிவாளர்/ப.பிஸ்கால்/சமாதான நீதிவான், மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

*குறிப்பு:* விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவீர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்கும் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 - ம் பிரிவின் மூலம் நீவீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

செ.விக்னேஸ்வரமூர்த்தி
கையொப்பம், பதிவாளர்.

2001 ஆம் ஆண்டு, ஆவணி மாதம் 20 ஆம் நாளாகிய இன்று

செ.விக்னேஸ்வரமூர்த்தி
பதிவாளர்/ப.பிஸ்கால்/சமாதான நீதிவான்,
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.
(C/17942)

## மணலாறில் மோதல்

மணலாறு, ஆண்டான்குளம் பகுதியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நடந்த மோதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த மோதலையடுத்து அப்பகுதியிலிருந்து விடுதலைப் புலி ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாகவும் - புலிகள் தரப்பில் கடுமையான சேதம் ஏற்பட்டிருக்கும் எனத் தாங்கள் நம்புவதாகவும் ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (உ-ஒ)

## சம்பள ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கும்

கொழும்பு,ஓக.21

அரச ஊழியர்களின் சம்பள உயர்வு குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சம்பள ஆணைக்குழு தனது அறிக்கையை அடுத்த மாதம் 31 ஆம் திகதி சமர்ப்பிக்க விருக்கின்றது.

இந்த அறிக்கையைத் தயாரிக்கும் பணியை ஆணைக்குழு ஆரம்பித்துள்ளதாக அதன் செயலாளர் ஜீ.பி அபயகீர்த்தி தெரிவித்தார்.

ஆயிரத்து 539 யோசனைகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்தன என்றும் -

அந்த யோசனைகள் விரிவாக ஆராயப்பட்டு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் - அவர் தெரிவித்தார். (உ-3)

## சிறை ஊழியருக்கு பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்.நீதிவான் நீதிமன்ற சிறைக் கூடத்துக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவருக்கு சாராயம் வழங்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மூவரையும் ஆள் பிணையில் செல்ல யாழ். மேலதிக நீதிவான் திருமதி எஸ்.இளங்கோவன் அனுமதித்தார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிமன்ற பொலீஸ் சார்ஜன்ட், நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். அதைத் தொடர்ந்து குறிப்பிட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் வாக்கு மூலங்களை நீதிவான் பதிவு செய்தார்.

மீண்டும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜரான பிரஸ்தாப சிறைச்சாலை உத்தியோகத்தர்களை ஆள் பிணையில் செல்ல அனுமதித்த மேலதிக நீதிவான் திருமதி ச. இளங்கோவன், வழக்கை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (உ-3-6)


## விற்பனையாகின்றன

1) O/L ENGLISH LITERATURE Past paper - 125/=
2) ENGLISH S.A - 30/=
3) GRAMMER IN ACTION - 55/=
4) A/L ENGLISH- 150/=
5) O/L ENGLISH model paper - 8/=
6) இந்து நாகரிகம் பகுதி -II வினாவிடை - 80/=
7) O/L வணிகக்கல்வி - 50/=
8) அரசியல் மூலதத்துவங்கள் A/L கடந்த கால வினாவிடை -247 50
9) சுற்றாடல் தரம் -3-80/=

மக்மிலன் புத்தகசாலை
இல.3, பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம். (C/17941)



**நாகம்ஸ்** சுன்னாகம்
வேணு, ரோஜா (இரட்டை வேடம்) நடித்த
**பொட்டு அம்மன்**
(ரீல்ஸ்)
பேய்களின் அட்டகாசம் நிறைந்த படம்!
காட்சிகள் : 11.00, 2.30 (புதியநேரம்)
(91399)



**ராஜா** யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய், தேவயானி, சூர்யா, நடிப்பில்
**பிரண்ட்ஸ்**
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
நாளை முதல்
*முதலமைச்சர் ஜெயந்தி*
(C/17975)



## வாழ்த்துகின்றோம்

நாளை அகவை அறுபது எய்தும்
எமது குடும்ப நண்பர்
**திரு.வே.நாகராசா**
(பிரதி அதிபர், மீசாலை வீரசிங்கம் ம.வி.)
அவர்கள் நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையையிட்டு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இ. சந்திரமௌலீசன்
*சரசாலை.* (91398) குடும்பத்தினர்.





உ
வடலியடைப்பு புதறானை
**திருவருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்**
நூதனவசந்த மண்டப பிரதிஷ்டா
மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் விஷு வருசம் ஆவணித் திங்கள் 6 ஆம் நாள் (22-08-2001) புதன்கிழமை, சதுர்த்தித்திதியில், அத்தம் நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய நன்னாளில் காலை 7.45 மணி முதல் 8.30 மணி வரை உள்ள சுப முகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியிருப்பதனால் அத்தருணம் அடியார்கள் யாவரும் வந்து கிரியைகளில் பங்குபற்றி விநாயகப்பெருமானின் அருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*வசந்தமண்டப சிற்பாசிரியர்:* சு. விக்கினேஸ்வரன், அராலி.

*வடலியடைப்பு* (C/17943) - பூங்காவன அமைப்புக்குழு.



## துடுப்பாட்டம்

**யாழ்.பிராந்திய மக்கள் வங்கியும்**
**யாழ்.பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக்கழகமும்**

இணைந்து மக்கள் வங்கியின் 40 ஆவது வருட நிறைவினைக் கொண்டாடும் முகமாக 6 பேர் 6 ஓவர்கள் கொண்ட மென்பந்து துடுப்பாட்டப் போட்டியொன்றினை விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தவுள்ளது.

| | |
|---|---|
| நுழைவுக்கட்டணம் | : ரூபா 100/= |
| விண்ணப்ப முடிவு திகதி | : 28.08.2001 |
| அணி ஒழுங்குத் தெரிவு | : 29.08.2001 பி.ப. 4.00 மணிக்கு திருநெல்வேலி Y.M.H.A. இல். |
| மைதானம் | : திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மைதானம். |

*விண்ணப்ப படிவங்களை திருநெல்வேலி* Y.M.H.A. *இல் பெற்றுக்கொள்ளலாம்.*

செயலாளர்,
யாழ்.பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக்கழகம். (C/17945)



## பிற்போடப்பட்டுள்ளது

**யாழ்.பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக்கழகம்**
**மக்கள் வங்கியின் 40 ஆவது வருட நிறைவு விழா**
**மாபெரும் சைக்கிள் ஓட்ட போட்டி - 2001**

மக்கள் வங்கியின் 40 ஆவது வருட நிறைவினைக் கொண்டாடு முகமாக எம்மால் நடத்தப்படும் சைக்கிளோட்டப் போட்டியின் விண்ணப்ப முடிவு திகதி அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 28.08.2001 (செவ்வாய்க்கிழமை) வரை பிற்போடப்பட்டுள்ளதுடன் இந்தச் சைக்கிளோட்டப் போட்டி பின்வரும் திகதிகளில் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

| | |
|---|---|
| பெண்களுக்கான போட்டி : | 02.09.2001 காலை 6.30 மணி (இலங்கை நேரம்) சுன்னாகம் சந்தி ---> காங்கேசன் துறை வீதி ஊடாக துரையப்பா விளையாட்டு அரங்கு வரை. |
| ஆண்களுக்கான போட்டி : | 08.09.2001 காலை 7.30 மணி (இலங்கை நேரம்) சட்டநாதர் கோயில் முன் ---> பருத்தித்துறை வீதி ஊடாக மாலிசந்தி ---> உடுப்பிட்டி ---> அச்சுவேலி ---> சுன்னாகம் ---> காங்கேசன்துறை வீதி ஊடாக துரையப்பா விளையாட்டு அரங்கு வரை. |

*குறிப்பு:* விண்ணப்ப முடிவு திகதிக்குப்பின் விண்ணப்பப்படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

செயலாளர்,
யாழ்.பிராந்திய மக்கள் வங்கி,
விளையாட்டுக் கழகம். (C/17944)


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை செல்வராசா (கண்டுமணி)

சரசாலை தெற்கு, கமலாசனி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை செல்வராசா (கண்டுமணி) நேற்று (20.08.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 20.08.2001 மாலை கரவெட்டியில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு, இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி:
*கரவெட்டி கிழக்கு,*
*உபதபாலகம் முன்பாக,*
*கலந்திரி, கரவெட்டி.*

தகவல்:
வே.கணேசன்
(சகோதரன்)
(91404)

## எந்தக் கட்சி தந்தாலும்
# போக்குவரத்துத் தொண்டருக்கு பொலீஸார் பயிற்சி வழங்குவர்
## யாழ். எஸ்.பி. கூறுகின்றார்

யாழ்ப்பாணம்,ஓக.21

"வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவில் பணியாற்ற விரும்பும் தொண்டர்களை எந்தக் கட்சியும் தரலாம். அவர்களுக்கு வேண்டிய பயிற்சிகளை வழங்கிப் பணியில் ஈடுபடுத்துவோம் என்று யாழ்.பொலீஸ் அத்தியட்சகர் என்.சி.குடாஹெட்டி தெரிவித்தார்.

"நேற்று மாலை அவர் யாழ்ப்பாணத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஆறு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பொலீஸார் தேவையில்லை; அவர்கள் பயனற்றவர்கள் என்று ஒரு நிலைப்பாடு இருந்தது. அதற்கு முக்கிய காரணம் மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான மொழிப் பிரச்சினைதான்.

இன்று அந்த நிலை மாறிவிட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த கோரிக்கையின் பேரில் வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பணிக்கு தொண்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்தத் தொண்டர்களுக்குத் தேவையான பயிற்சிகளை நாம் வழங்குகின்றோம். அவர்களுக்குரிய சீருடைகள், சம்பளம் ஆகியவற்றை அவர்களைச் சிபார்சு செய்யும் கட்சியே வழங்க வேண்டும்.

ஈபிடிபி. மட்டுமல்ல எந்தவொரு கட்சியும் தொண்டர்களைத் தந்தால் அவர்களை வரவேற்றுப் பயிற்சி அளிக்கக் காத்திருக்கிறோம் - என்றார் அவர்.

இந்த மாநாட்டில் பொலீஸ் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி உடுவெல்ல, உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ரப்பி ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-3-9)

# தமது இராஜினாமாக் கடிதங்களை 3 அமைச்சர்கள் சமர்ப்பித்தனர்

கொழும்பு,ஓக.21

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் மூன்று அமைச்சர்கள் திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை நேற்றிரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளித்துள்ளனர்.

அலவி மௌலானா, ஜீவன் குமார ரணதுங்க, ரெஜி ரணதுங்க ஆகியோரே இராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பித்த அமைச்சர்களாவர்.

கடிதம் கையளித்த சமயம் ஜனாதிபதியிடம் அலவி மௌலானா "தங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக தாம் இருப்பதை வெளிப்படுத்தும் விதத்தில் நமது இராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பிக்கிறோம். தங்களின் விருப்புக்கு ஏற்ற வகையில் தாங்கள் செயற்படலாம். எந்தத் தேவைக்கும் அதைப் பயன்படுத்தலாம். ஐ.தே.கவில் இருந்து பிரிந்து வருபவருக்கு அமைச்சுப் பதவி வழங்கவும் அனுமதிக்கிறோம்."

- என்று தெரிவித்தார் எனக் கூறப்பட்டது. (உ-3)

*(முன்னர் வந்த செய்தி 6 ஆம் பக்கத்தில்)*

# படைகளில் இருந்து ஓடியோரை பணிக்கு வைத்திருப்பது குற்றம்!
## அரசுத் தரப்பு மீண்டும் அறிவிப்பு

படைகளில் இருந்து தப்பிச் சென்றவர்களை தமது பொறுப்பில் வைத்திருப்பதும், அவர்களை வேறு கடமைகளில் அல்லது பணிகளில் ஈடுபடுத்துவதும் தண்டனைக்குரிய குற்றம் என்று அரசு மீண்டும் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசு விடுத்துள்ள விசேட அறிவித்தலில் கூறப்பட்டிருப்பதாவது:-

தற்போது நாடு எதிர்நோக்கியிருக்கின்ற நெருக்கடியான சூழ்நிலையில், படைகளில் இருந்து தப்பியோடியவர்களை பல நிறுவனங்களும் பணிக்கு அமர்த்தியுள்ளன.

இது குற்றவியல் சட்டத்தின் 133 ஆவது பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இதேபோன்று படையில் இருந்து தப்பியோடியோரைத் தமது பராமரிப்பில் வைத்திருப்பது அல்லது அவர்கள் தலைமறைவாக இருக்க உதவுவது ஆகியன இரண்டு வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனைக்குரிய குற்றமாகும் - என்று தெரிவிக்கப்பட்டது.

## மருதானையில் இருவர் கொலை

மருதானையில் நேற்றிரவு 7 மணியளவில் பாதாள உலகக் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் உயிரிழந்தனர்.

ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கும் மற்றவர் கத்தி வெட்டுக்கும் இலக்காகி உயிரிழந்ததாக கூறப்பட்டது.

## விளக்க மறியலில் வைக்க உத்தரவு

கொழும்பு,ஓக.21

இராணுவக் கட்டுப்பாற்ற பிரதேசத்துக்கு தடைசெய்யப்பட்ட பொருள்களைக் கடத்திச் செல்ல முற்பட்ட போது கடந்த 17ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் மடுவைச் சேர்ந்த - மான சப்போடி கணபதிப்பிள்ளை (வயது 30) என்ற இளைஞரை இரண்டு வார காலத்துக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் எம்.எச்.எம்.அஜ்மிர் உத்தரவிட்டார்.

சைக்கிள் உதிரிப்பாகங்கள், பொலித்தீன் பைகள் ஆகியவற்றை முருங்கன் இராணுவக் காவலரண் ஊடாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கடத்த முற்பட்டபோது இவர் பிடிபட்டதாகக் கூறப்பட்டது.

பொலீஸ் விசாரணையின் பின்னர் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் அவர் ஆஜர் செய்யப்பட்டபோதே விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (உ-ஒ-4)

## பொல்காவலையில் ரயில்தடம்புரண்டது

கொழும்பு,ஓக.21

நேற்றுக்காலை கொழும்பிலிருந்து வவுனியாவுக்குச் சென்று கொண்டிருந்த ரயில் காலை 7.45 மணியளவில் பொல்காவலையில் தடம் புரண்டது.

இதனால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையாயினும், நேற்று மாலை வரை இந்த ரயில் பாதையில் போக்குவரத்து நடைபெறவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ஒ-4)

## ஜனாதிபதிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து விகாரமாதேவி பூங்கா திறந்தவெளி அரங்கில் இடம்பெற்ற எதிர்ப்புக் கூட்டத்தில் உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டம் நடந்த பகுதியில் நேற்று காலை முதல் மாலை வரை போக்குவரத்துத் தடை செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ-ஒ-4)

## உல்லாச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஊழியர்களை வேலைநீக்கம் செய்ய பல ஹோட்டல்கள் தயாராகி வருவதாகவும் அவர் கூறினார்.

சர்வதேச ஹோட்டல் தினமான எதிர்வரும் 27ஆம் திகதி தமது ஊழியர்களின் அவல நிலையை வெளிப்படுத்தும் விதத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தப்போவதாகவும் அவர் தெரிவித்தார். (உ-3)

# வவுனியா நீதிமன்றக் கட்டடம் வியாழனன்று திறந்து வைப்பு

வவுனியா,ஓக.21

வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்ட மாவட்ட நீதிமன்றத்துக்கான கட்டடத்தின் திறப்புவிழா எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா புதிய கட்டடத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கவிருக்கின்றார். இந்த நிகழ்வில் மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன், மேல் நீதிமன்ற நீதிபதி என்.யோகசிகாமணி ஆகியோர் கலந்துகொள்வர்.

'சுடர் ஒளி' பத்திரிகையின் அனுசரணையுடன் வவுனியா மாவட்டப் பாடசாலைகளின் மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இதில் இடம்பெறவிருக்கின்றது.

வெற்றி பெற்றவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படும்.

'சட்டமும் தனி மனிதனும்' என்னும் தலைப்பில் பேச்சுப் போட்டியும்-

'எமது சமுதாயமும் மனித உரிமைகளும்' என்னும் தலைப்பில் கட்டுரைப் போட்டியும் மாணவர்களிடையே நடத்தப்பட்டன. (ஐ-3)

# குற்ற விசாரணைப் பிரேரணையில் ஒப்பம் பெறும் பணி நாளை ஆரம்பம்

கொழும்பு,ஓக.21

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிரான குற்றப் விசாரணைப் பிரேரணையில் எதிர்க்கட்சி எம்பிக்களின் கையெழுத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் பணி நாளை புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் பிரேரணையில் ஜனாதிபதிக்கெதிரான 9 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

ஜே.வி.பி. உட்பட சகல எதிர்க் கட்சிகளும் இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக கையெழுத்திடுவதற்கு சம்மதித்துள்ளதாகவும் -

இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் -

ஐ.தே.கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (உ-4)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்படுகின்றது.

எனினும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிரான நிலைப்பாடு எடுத்துள்ள அமைச்சர் திஸநாயக்கவும், பிரதி அமைச்சர் டலஸ் அழகப்பெருமாவும் இக்கூட்டத்தைப் புறக்கணித்தனர். இந்தக் கூட்டத்திலேயே அமைச்சர் திஸநாயக்க ஜனாதிபதியின் கடும் விமர்சனத்துக்கு இலக்கானார்.

"பல கோடி ரூபா சமுர்த்தி நிதி - அரச வங்கிகளான இலங்கை வங்கியிலோ, மக்கள் வங்கியிலோ முதலிடப்படாமல் - தனியார் வங்கி ஒன்றில் மிகக் குறைந்த வட்டிக்கு வைப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது. நிதி அமைச்சர் என்ற முறையில் நான் இது குறித்துக் கேள்வி எழுப்பியதும் என்னை விமர்சிக்கின்றார்கள்" - என்று அங்கு குறிப்பிட்டார் ஜனாதிபதி.

"இப்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விரைவில் விசாரணை விடயங்களை அம்பலப்படுத்துவேன்" என்றும் ஜனாதிபதி சொன்னார்.

சமுர்த்தி அதிகாரசபை நிதி அமைச்சின் அனுமதியின்றி புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 'பான் ஏசியா' வங்கியில் 16 கோடி ரூபா பெறுமதியான மூன்று லட்சம் பங்குகளை வாங்கியது தொடர்பாகவும் -

அமைச்சர் திஸநாயக்க குடும்பத்துக்குச் சொந்தமான - நாவலவில் உள்ள - இரண்டு ஏக்கர் விஸ்தீரணமான காணிகள் குறித்தும் -

இரகசியப் பொலீஸாரும், லஞ்ச ஆணைக்குழுவும் விசாரணைகளை ஆரம்பித்து, முடுக்கிவிட்டிருப்பதாகக் கொழும்பு செய்திகள் தெரிவித்தன. (உ-)

## விவரம் பதிய படிவம் விநியோகம்

வவுனியா,ஓக.21

வவுனியா பூங்கா வீதியை உள்ளடக்கிய பகுதியை நேற்று மாலை அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து அந்தப் பகுதியில் வதியும் மக்களிடம் படிவம் ஒன்றை விநியோகித்தனர்.

அந்தப் பகுதியில் தங்கியுள்ள மக்கள் தமது விவரங்களை அந்தப் படிவத்தில் பூர்த்திசெய்து இன்று காலை கையளிக்கும்படி படையினர் கோரியுள்ளனர். (உ-3)

## தடை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோறளை அந்த இணையத்தளச் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி கொழும்பில் ஐ.தே.க. நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் போது, பொலீஸார் நடத்திய தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தது குறிப்பிடத்தக்கது. (உ-ஒ-4)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு காணலாம் என நம்புகிறேன். சமுர்த்தியின் 16கோடி நிதி 3சதவீத வட்டிக்குத் தனியார் வங்கியில் வைப்பிட்டது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறினார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

சமுர்த்தி நடவடிக்கைகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த ஜனாதிபதி இப்படிக் கூறியிருப்பார் என நான் நம்பவில்லை. பத்திரிகைகளில் வெளியான செய்தியில் உண்மையில்லை.

ஜனாதிபதி 16கோடி நிதி குறித்து உண்மையில் குறிப்பிட்டிருந்தால் அவருக்குத் தகவல் வழங்கும் அதிகாரிகள் குறித்து அவர் கவனமாக இருக்கவேண்டும் என்று அவரிடம் கூறவிரும்புகிறேன்.

கூடுதல் வட்டியை எதிர்பார்த்து, அரச வங்கிகளில் வைப்பிடாமல் தனியார் வங்கிகளில் வைப்பிடுவது வழமை. ஆனாலும் 16 கோடி ரூபாவை எந்த வங்கியிலும் வைப்பிடவில்லை என்பதை உறுதியாகக் கூறுகின்றேன் - என்றுள்ளது. (உ-3)


**பத்திரிகைகள் விநியோகிக்கவும்/மடிக்கவும் ஆள்கள் தேவை**

தமது மோட்டார் சைக்கிள் மூலம் பத்திரிகைகளை எடுத்துச் சென்று விநியோகிக்கவும், பத்திரிகைகளை மடிக்கவும் ஆள்கள் தேவை. அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

மனித வள அலுவலர்,
'உதயன்' நிறுவனம்,
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**ரஷ்யாவில் மருத்துவப் பட்டப்படிப்பு**

A/L இல் 3 பாடங்கள் சித்தியுடன் மருத்துவப் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு ரஷ்யாவில் பிரபல்யம் வாய்ந்த "TVER STATE MEDICAL ACADEMY" இல் அனுமதி பெற்றுத்தரப்படும்.

வருடாந்தக் கட்டணம் 1900 $

*மேலதிக விவரங்களுக்கு:*

V.Michael

70/5, Dammalankara Mawatte, Hill Street, Dehiwela. T.P. 01-727710.

29, 2nd Cross Street, Passaiyoor, Jaffna. T.P. 3179

(91382)

**எமது Five star & பிரமிட் வீடியோ CD வெளியீடுகள்**

- ஊவ்வி
- ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது
- பறவைகள் பலவிதம்
- தங்கைக்காக
- சின்னப்பூவே மெல்லப்பேசு
- அடுத்த வீட்டுப்பெண்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/17948)

**நவீன கணனிகள் நம்பமுடியாத விலையில்**



**Pentium 4 (1.4 GHz)**

Rs. 89,500/= மட்டுமே

மேலும் ரூபா 55,000/= இல் இருந்து......
IBM Cyrix-333, Pentium III 633,
PentiumIII 800, PentiumIII 1000 MHz

தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையில், உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம் IIS

கணனிகளைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவரும் 2 நபர்களுக்கு இலவசமான கணனிப் பயிற்சியை IIS இல் மேற்கொள்ள முடியும்.

IIS விற்பனைப் பிரிவு,
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
TP. No : 2831


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.